உ

பகவதிதுணை.

# சுக்கிரநாடி சோதிடம்.

ஆனந்தகளிப்பும்.

திரவுகோலும் இம்மூன்றும் அடங்கியிருக்கிறன.

இஃது,

திரிசிரபுரம் உறையூரில் வசிக்கும்

ஆறுமுகம்பிள்ளை குமாரர்

ஜோசியம்

நாராயணசாமிபிள்ளை அவர்கள்

முன் ஏட்டுப்பிரதியிலிருந்தெழுதி

பரிசோதிக்கப்பட்டு,

முதற் பதிப்பு,
கக்கப்பிரதி 500



இதன் விலை அணா ௪.

திருசிரபுரம் - புஸ்தகஷாப்

அப்பாவுபிள்ளை குமாரர்

மாமுண்டியாபிள்ளை

அவர்களால்

JEEVAKARUNIYAMPRESS

MADRAS

1906.

RegisteredCopy-right.

உ

கடவுள் துணை.

# றிஜிஸ்டர் அறிவிப்பு.

---

இதனால் சகலமான அச்சுக்கூடத் தலைவர்களுக்கும் புத்தகவியாரிகளுக்கும் யான் தெரிவிப்பது யாதெனில், இந்த சுக்ரநாடி சோதிடஆனந்தகளிப்பு திரவுகோலாகிய இந்த புத்தகத்தை உரையூர், நாராயணசாமிபிள்ளை அவர்களால் இயற்றபட்டதை யான் அவர்களிடத்தில் சகலசுகந்திரமும் பெற்று கொண்டு கனம்பொருந்திய கெவர்மெண்டார் அவர்களது 1905-ஹு த்திய 25-வது ஆக்ட்டு 20-வது செக்ஷன் 8-வது ரூல்சின் பிரகாரம் றிஜிஷ்டர் காப்பிரைட்டு செய்யப்பட்டிருக்கிர படியால் எனது அநுமதி இல்லாமல் இன்னூலின் பெயரையாவது முன்பின்னுவது பிரட்டி எவ்விதமும் அச்சிடக்கூடாது அப்படி அச்சிடுவார்களாகில் அதினால் நேரிடும் நஷ்டத்திற்கு உத்திரவாதிகளாகவும் ஜவாப்புதாரிகளாகவு மிருப்பீர்களென்று யாவரும் தடையின்றி கவினிப்பீர்களாக.

இப்படிக்கி,

அ. மாமுண்டியாபிள்ளை.

புஸ்தக வியாபாரம்,

திருச்சினுப்பள்ளி.

உ

# எட்டணு முத்திரை ஸ்டாம்பு.

சுக்கிரநாடி சோதிட ஆனந்தகளிப்பு, திரவுகோல் என்னும் இன்னூலின் எடிட்டர் பாத்திய விக்கிரய பத்திரத்தின் நகல்.

**1906**ஸு நவம்பர்மீ **17**உ திருச்சினுப்பள்ளி கோட்டை புஸ்தகவியாபாரம், அப்பாவுபிள்ளை குமாரர் ஷை வியாபாரம், மாமுண்டியாபிள்ளைக்கி திருச்சினுபள்ளி உரையூரிலிருக்கும் ஆறுமுகம்பிள்ளை குமாரர் ஜோசியம், நாராயணசாமிபிள்ளை எழுதிக் கொடுத்தது என்னவென்றால் என்னிட மிருந்த மேல்கண்ட சுக்கிர நாடி, சோதிட ஆனந்தகளிப்பு, திரவுகோலாகிய எட்டுப்பிரதியை பெயர்காப்பிசெய்து நான் தங்களுக்கு நாளது தேதியில் விலை தீர்மானித்த ரூபா **25**, இந்த ரூபா இருபத்தைஞ்சும் தங்களிடத்தில் நான் பெற்றுக்கொண்டு மேற்படி புத்தகத்தின் எடிட்டர் பாத்தியதைமுழுமையும் தங்களுக்கு வித்துவிட்டேனுகையால் இனி எனக்கும் இந்த புத்தக ரிஜிஸ்டருக்கும் யாதொரு பாத்தியதையும் கிடையாது இன்றைய தேதிமுதல் தாங்களே வேண்டுமான பதிப்புகள் அச்சிட்டுவிர்ப்பனைசெய்து கொள்வதும் தவிர மேற்படி புஸ்தகத்தை அச்சில் பதிப்பிக்க எனக்கு எவ்வித பாத்தியமுமில்லை. நான் உள்பட மற்றவர்கள் ஷை புஸ்தகத்தை அச்சிட்டு விற்பனைசெய்தால் அதனுல் உண்டாகும் சகல நஷ்டத்தையும் அச்சிட்டவர்களிடம் தாங்களே வாங்கிக் கொள்வீர்களாகவும் இதற்குமுன் இந்தபாத்தியதையைத் தங்களுக்கு தவிர வேரேயாருக்கும் அச்சிடும்படி எவ்வித அநுமதியும் நான்கொடுக்கவில்லையென்று தங்களுக் குறுதிசொல்லி இந்த சுத்தகிரைய சாசனம் செய்து கொடுத்து விட்டபடியால் சாசனவாசகபடிக்குள்ள சகல பாத்தியதையும் தாங்களே அனுபவித்துகொள்வீர்களாகவும், இந்தப் படிக்கி, அ. மாமுண்டியாபிள்ளைக்கி, உறையூர் நாராயணசாமிபிள்ளை சுத்தகிரய சாசனம் செய்து கொடுத்தனன்.

இப்படிக்கி,

சுகஸ்தலிகிதம், ஆ. நாராயணசாமிபிள்ளை, சம்மதி.

சாட்சிகள்.

தி. கோ. மாப்பிள்ளைநாய்க்கர், அரண்மனை தெருவிலிருக்கும், லட்சுமணசிங் குமாரர் சத்தர்சிங் அறிவேன்.

தி. கோ. கொல்லவங்கதெருவிலிருக்கும் சடையப்பிள்ளை குமாரர் ஷாப்பு வியாபாரம், துரைசாமிபிள்ளை அறிவேன்.

தி. கோ. ஆண்டார் வீதியைச்சேர்ந்த சோளமண்டி தெருவிலிருக்கும், தாண்டவராயப்பிள்ளை குமாரர் புஸ்தக வியாபாரம் பொன்னுசாமிப்பிள்ளை அறிவேன்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# விளம்பரம்.

---

இதனால் சகலமான பேர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், திருச்சினாப்பள்ளிகோட்டை புஸ்தக வியாபாரம், அ. மாமுண்டியாபிள்ளை அவர்களிடத்திலும், மேற்படியூர் புஸ்தக வியாபாரம் அ. சன்னாசியாபிள்ளை இடத்திலும், தமிழ், புராணம், கதை, அம்மானை, நாடகம், விலாசம், கீர்த்தனை, ஜோசியம், வயித்தியம், அந்தாதி, கலம்பகம், கோவை, தூது, மாந்திரீகம், ஊ. புஸ்பரதசெட்டியார் புஸ்தகங்களும் இஸ்லாமானவர்களுக்கு வேண்டும், தமிழ் புத்தகங்களும், காவலர், பாவலர், 'நாவலர், யாவருக்கு வேண்டும், இலக்கண இலக்கிய புஸ்தகங்களும், அத்வைத சாஸ்திரங்களும், ஆருமுகநாவலர், இப்பேர்க்கொற்ற அச்சுக்கூடத்திற் பதிப்பித்த உயர்ந்த புஸ்தகங்களும, கிரந்தம், தெலுங்கு, புஸ்தகங்களும், பிரைமரி ஸ்கூல்வரையில், ஸ்கூல் புஸ்தகங்களும், டிராமா சரித்திர புஸ்தகங்களும், எல்லாவித புஸ்தகங்களும், விற்பனைக்கு தயாராக இருக்கிறபடியால் வேண்டியவர்கள் நேரிலாவது, அல்லது எனது மேல்விலாசத்திற்கு எழுதினால் உடனே வி. பி. தபாலில் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கி,

☞ அ. மாமுண்டியாபிள்ளை,
புஸ்தக வியாபாரம்,
திருச்சினாப்பள்ளி.

இப்படிக்கி,

அ. சன்னாசியாபிள்ளை.
புஸ்தக வியாபாரம்,
திருச்சினாப்பள்ளி.

உ

கடவுள் துணை.

# சோதிடபுஸ்தகஅறிவிப்பு

சாதகலங்காரம்.
சாதகலங்காரம் ஒசித்தி.
சாதகலங்காரம் உரையுடன்
சாதகசிந்தாமணி.
சாதகசூடாமணி.
சாதககணிதாமிர்தம்.
குமாரசுவாமியம்.
வீமேசுர உள்ளமுடையான்.
சூடாமணி உள்ளமுடையான்.
சோதிடகளஞ்சியம்.
சினேந்திரமாலை,
ஜெயமுனிவாக்கியம்.
மரணகண்டிகை
தைய்யகேரளம்.
பாராசாரியம்.
கௌசிகசிந்தாமணி.
ஷை 2-வது பாகம் தர்க்கம்.
சுகர்நாடி 1000 பாடல்.
பெரிய சுகர்நாடி சோதிடம்.
சங்கராசாரியர் ஆயுள்பாகம்.
வருஷாதிநூல்.
ஷை பெரிது.
ஷை ஒசித்திகிளேஸ்.
சந்திரகாவியம்.
தாண்டவமாலை.
நவரெத்தினமாலை.
மனையடிசாஸ்திரம்.
தும்மநூல்.
கனவுநூல்.
துடிநூல்.
ஆருடசாஸ்திரம்.
நந்திநூல் ரேகைசாஸ்திரம்.
அங்ககுறி சாஸ்திரம்.
அஸ்தகுறி சாஸ்திரம.
சரீரசாஸ்திரம்.

கமலமாமுனிரேகைசாஸ்திரம்.
ஷை உரையுடன்
இராமதேவர் ரேகைசாஸ்திரம்.
ஷை உரையுடன்.
புருஷ ஸ்திரிசாமுத்திரிகா லட்சணம்
ஆண்பால் ரேகை சாஸ்திரம்.
அம்மணியம் அய்யாசாமியம்.
தொடுகுறி சாஸ்திரம்.
பாச்சிகை சாஸ்திரம்.
ருது சாஸ்திரம்.
சகாதேவன் சாஸ்திரம்.
ஷை சின்னது மரணகுறிப்பு.
சர்வபிரயாண சகுணசாஸ்திரம்.
களவு சாஸ்திரம்.
ஷை சின்னது.
சர்வகனவின் பலாபலன்.
சோதிட நூலாதாரம்.
சொதிட பாலபாடம்.
சோதிட நவக்கிரகமாலை.
அகஸ்தியர் பஞ்சபட்சி.
சின்னது உரோமரிசி.
ஷை பெரிது.
போகர் பஞ்சபட்சி.
சுருக்கு பஞ்சபட்சி.
ஷை பெரிது ஒஸ்தி.
சப்தரிஷிவாக்கியம் 10,21 பாடல்.
ஷை பெரிது 5500 பாடல்.
காக்கையர் சோதிடம் 1000 பாடல்.
கந்தர்நாடி 1000 பாடல்.
கந்தர் ஆருடம்.
மனை ஆருடசிந்தாமணி.
புலிப்பாணி சோதிடம்.
நந்திவாக்கிய சோதிடம்.
சந்திரசேகரம் முதற்பாகம்.
ஷை 2-வது பாகம்.

சோதிட ஆனந்த களிப்பு.

சகாதேவர் சந்திரநாடி.

சிர்ப்ப சிந்தாமணி.

ஷை ஒசித்தி கிளேஸ்.

சோதிடபிர்மாண்டசேகரம்.

சோதிட கோட்சார சிந்தாமணி

வீமகவி.

ஆரூடசேகரம் 9-சேர்ந்தது.

அஷ்டதிக்கு 5-ஆரூடம் சேர்ந்தது

நவகண்ட ஆரூடம்.

அநுபோக பிரசினே ஆரூடம்

அனுபோக ஜாதகரகசியம்.

ஷை 2-வது பாகம்

ஷை உ-ம் சேர்ந்தது

நஷ்டஜாதகம் கணிதம்

ஜாதக பாரிஜாதகம்.

சோதிட கடலகராதி.

கூபசாஸ்திரம், சல்லிய நிரணயம்

சோதிடபிரஞ்ஞானதீபிகை

சுகர் நாடி திசாபுத்தி அந்தரபலன்

மங்களேஸ்பரியம்.

மணிகண்ட கேறளம்.

சோதிட அரிச்சுவடி

உ-வது பாகம்

சோதிட நுட்பம்

சோதிட திவாகரமென்னும் சோதிட குணாகரம்

சந்தான தீபிகை

சருவார்த்த சிந்தாமணி

கனவின் பலன்

பிணிவிஷய பலன்

ஜீவனவிஷய பலன்

சகுன பலன்

காலையிலெழுந்து விழிக்கும் பலன்

சோதிட சிகாமணி

கௌளி சாஸ்திரம்

காக்கயர் நூல்

சோதிட மாலை

சோதி ரத்தினகரம்

பாலக்கிரக தோஷ நிவர்த்தி

பாக்கட்டு சோதிடம்

புஜண்டரநாடி சோதிடம்

மாட்டுவாகடம்

அசுவ வாகடம்

கருவூரார் மாந்திரிகம்

மணிமந்திரவயித்திய சேகரம்

ஓட்டியம் சல்லியம்

பீர்முமது ஞானசரநூல்

ருதுநூல்

சோதிட பிரபஞ்சசேகரம்

சோதிட கண்ணாடி

அல்லகை ஆரூடம்

காலசக்கரம்

நாமகோடி என்கிற ராமநாமம் 5-லெக்ஷம் கொண்டது மந்திரம்

ராமரகசியம்

நான்குவேத ரகசியம் ருக்கிறது

புலிப்பாணி முனிவர்கள் அருளிச்செய்த சோதிட தாய்மகளேசல் 300

அகஸ்தியர் பஞ்சபட்சி திரவுகோல்

இன்னம் அநேக தமிழ் தெலுங்கு கிரகந்தம் வயித்தியம்

ஜோசியம் ஸ்கூல் புஸ்தகங்களும் இருக்கிறது

முதல் சங்கீதம்

2-ம் சங்கீதம்

முதல் பாகம் அநுபோக வயித்தியம்

2-ம் பாகம்

3-ம் பாகம்

4-ம் பாகம்

5-ம் பாகம்

6-ம் பாகம்

7-ம் பாகம்

8-ம் பாகம்

8-புத்தகம் ஒரேகட்டடமாக யிருக்கிறது

வியாசர் வயித்தியம்

நாலுகாண்டம் வயித்தியம்

வயித்திய கைமுறை

வயித்திய திரவுகோல்

12-பாகம் சேர்ந்தது ஒரேகட்டடம்

வயித்தியாநுகூல ஜீவரட்சணி

இராஜவயித்திய போதினி

பாலவயித்திய போதினி

உ

கடவுள் துணை.

# சுக்கிர நாடி சோதிடம்.

### விநாயகர்துதி.

திருமருவு புவியதனி லுரைசீலர் தங்களிலும் சிரந்தோர் மக்கள்
உருவமது வொன்றாகியுங் குணங்குறிகள் வேறுபடு முன்மைகாண
பருதிமதி சேய்மால் பொன்புகர் சனிமுதயமொடு பகணத்தாலும்
உருதியொடு பவனுறைக்க கணபதியுன் பதமலரை உச்சிவைப்பாம்.

### சோதிடர் லெட்சணம்.

கதிரவ னுதிக்குமுன்னெமே துயிலைகடிந்துதன் நித்தியகருமம்
விதிதவறாது முடித்துபின்னாக விண்மணியோன் திசைநோக்காய்
மதிதரதெய்வ வணக்கமுஞ் செய்துவண்புலி ஆதனத்திருந்தெ
மதிதனிலுள்ள மானிடர்தமக்கு பலன்களையுரைத்தலும் விதியே.

### இதுவுமது.

சத்தியமொழியுந் தயைபொறைவாய்மை சாந்தமாதிகன் முதல
னைத்தும், எத்துநற்குணமும் முயர்தருங்கல்வி யொப்பிலாசார்ந்தன்
னீதிபத்தி, மீகைதேவதாபத்தி பற்றிலர்பான் மிருபட்சம், நத்தி
மிறக்கமேற்று வாழ்பவனே நற்கலையுரைக்குஞ் சோதிடனே.

### சோதிடம் சோல்லாதகாலம்.

படுக்கையிலிருந்து மாங்கதிர்படுத்தும் பற்றுலக்காமுனும் வழியில்
நடக்கையிலேனும் நிர்க்கையிலேனும் நற்பசியோடு மன்னியர்கள்

தடுக்கையிலேனும் தயிலமிட்டிருந்தும் சவுசமார் போதும்பூவலரி
விடுக்கையிலேனும் மிருளதிலிருந்தும் வெகுளியின் காலமுமாகா.

### இன்னாருக்குச் சோதிடம் சொல்லப்படாதென்பது.

திருமகளருளைப் பெற்றிடாதவர்க்குந்
தெய்வத்தை பணிந்திடாதவர்க்கும்
தருமனைபோலும் நளினமாயுறைத்து
தாம்பூலதட்சணை யின்றி
வருமையையுறைத்து வந்துகேட்பவர்க்கும்
வஞ்சகர்லோபியர்தமக்கும்
சுருதியை நம்பாதர்க்க வாதியர்க்கும்
சோதிடமுறைப்பதேதோஷம்.

கடவுள் துணை.

# குருசிஷியர் தர்க்கம்.

## ஆனந்தகளிப்பு.

சரணஞ் சரணமென்குருவே யுந்தன், தாளடி போற்றினேன் தர்க்காருந்திருவே, அரனேயேகந் துணையன்னை நீரர் அடியாள்பல த்தை யடியேருந்திருவே. 1

சந்தேகமெல்லாநான் தேர்ந்தேன், ஒரு சந்தேகமுண்டதை தர்ப்பராதீரும், வந்திடும் பாலகரெல்லாம் மாறும் மாரகந்தன்னை மகிந் துரையையா. 2

மாரகங் கேட்டிடும்பாலா வது மகத்தான வார்த்தை மாணுக் கனேசீலா, ஆருமரியாரிவ்வுலகில் அந்த ஆதிபிர்மனதை அறிவானே யல்லால். 3

பூலோகமானிடராலே அரியப்போகுமோ எந்தன்புகழ்பெ ற்றசீலா, சாலோகசாமீப ரூபயுட்சிய தபசிகளே இதைதானரி வாரே. 4

அரிய ஒண்ணுதென்றகுருவே, இந்த அம்புவிதன்னிலே சோதி டம்பொய்யோ, இருமூன்றுசாஸ்திரம் தன்னில் நீரும் இதுவும் மொ ருசாஸ்திரம் மென்றுநீர் சொன்னீர். 5

சாஸ்திரம் பொய்யல்ல சீஷா, இந்தச் சங்கையிலரிவது வெகு வல்லபோஜா, ஆத்திரப்பட்டாலாகாது இதில் ஐஞ்சாருதொல்லை அ ரிபவே வேணும். 6

தொல்லையென்று சொன்ன ஐயா, அதைச் சொல்லு சொல்லு மெந்தன் துரையே மால்மெய்யா, அல்லலாய் மாரகம்போக்கில் இந்த அம்புவிக்கேசொன்ன சோதிடம் பொய்யோ. 7

பொய்யென்று சொல்லாதே சீஷா, அந்த புதயனுனக்குப் போ திப்பேன் வாசா, மெய்யாக திசைமூன்றுவேணும் இந்த மேதினிதன் னில் ஸ்புடங்களும் வேணும், 8

அஷ்டக வர்க்கமும் வேணும், வெகுஅன்பான தஸ்வர்க்கமது வேவேணும், தொட்டுமே நவக்கிரகமேமீய்ந்த நல்ல சுத்த ஆயிஸ்களும் துணையாகவேணும். 9

புத்தியும் முத்தியும் வேணும், வெகு பொல்லா பதஷ்டத்தை தள்ளவே வேணும், சத்தியம் நினைக்கவே வேணும், இது தப்பாமல் நின்றோர்க்கு தான்வரும் சாஸ்திரம். 10

சொன்னதை யெல்லானு னோர்ந்தேன், முன் சொல்லியதிசை மூன்றில் விபரமேதையா, அன்னிலே அரியவே வேணும், நீர் அன்பாகச்சொல்லுமென் னுண்டவா சுவாமி. 11

சொல்லுகிறேன் கேள் மாணுக்கா, வெகுதுல்லிய மாமூயிர் திசையது மைந்தா விள்ளுகிறேனந்த திசையை நீயும், வெளியில் மந்தனோடாமல் நிருத்து. 12

சூரியர்க்கு வருஷம் நாளாம், நீயும் சொல்மதி யவர்க்குதிசை ஐந்தாம் உரிய குஜனுக்குமே மூன்றும், பாரில் ஓங்குமரவுக்கு உண்மையா வேழாம். 13

பொன்னவர்க்கு திசையாரு வருஷம், பொங்குங் கரிக்கினீ யொன்பதாய்க்கூரே, அன்னல் புதனுக்கோ ரெட்டு, அதில் அடங்குங் கேதுவுக்கு மூன்றதாய் கூற. 14

சுங்கற்கே திசைபத்தாம், நீயும் சொல்லுவா இவ்விதம் மூயிர் திசையப்பா மங்களமாமிந்த திசையைபோட்டு மாரகஞ்சொல்வேன் மகிழ்ந்துநீ கேளாய். 15

பேரிரந்தோன் திசைமுன்னுல் மேவும், பின்னுக விரண்டிலிருந்தோன், மாருபன்னிரெண்டுராசி, தன்னில் மருவவுங் கோட்கட்டிசை வரிசையாய் வருகும். 16

ஐயனே எந்தன் குருவே, சொன்ன தரிந்தேன் மேறுதன் னிலேந்துகோள் நிர்க்கில், மெய்யனே எத்திசை முன்பாய்வரும், விளங்கச் சொல்லுவா மெந்தன் மெய்யான குருவே. 17

ஒருராசி தனிலேந்து கோட்க, நிர்க்கவோடு வரிசையாய் தான் பிரகாரம், மருராசி தன்னில் நின்றகோளும், இந்தமார்க்கமாக யவர் மகிழ்ந்து நடப்பார். 18

கேட்டுச் சந்தேகந் தெளிந்தேன், திசை கெற்பத்தில் செல்போக எடுப்ப தெப்படியோ, தாஷடீகமான என்குருவே, இந்தச் சந்தேகந் தீர அருள்புரி குருவே. 19

எந்தக்கோ ளின்றிசைதானே, அதை நூற்றிமுப்பத் தஞ்சுக்கு மீந்து வந்த ஈவை வைத்துக்கொண்டு, தன்னால் மன்னுந்திசைகோளி ன் ஸ்புடங்களைசெய்து. 20

சென்றிடு நாழிகைதன்னில், இனி செல்லுங் கடிகையை யுன் னில் பெருக்கி, நின்றிடு மாண்டுடன் மாசந்தேதி நிற்கும், கடிகையுந் நினைவாதார் பாரே. 21

சொல்லுந் திசையுமரிந்தேன், புத்திசெப்பமுடனே யானுப்பிர ப்பிக்க சொல்லுமெந்தனுட குருவே, யுந்தன்வைய்ய மலரடி மெய்யா பணிந்தேன். 22

புத்திபிரிக்கவே வேணும், திசை பொங்கு வருடத்தை காலிர் பெருக்கி, சத்தியமாக ஒன்றுக்கே, காறுந்தப்பாமல் பனிரெண்டாத் தானுமே வைத்து. 23

நவக்கிரேக உடற்றிசை லெக்கம், தன்னால் நாடிப்பெருக்கிநீ நாளாக கொள்வாய், கவனமாக இதைபாராய், வெகு கடினங் கடின மிதைகாண்பாய்நீ மெய்யாய். 24

துய்யனே எந்தன் குருவே, நீர்சொன்ன உடற்றிசை யாதையா சொல்வீர், மெய்யனே உன்பாதம் போற்றி, நன்றாய் விளங்கவே எந் தனுக்கருள் புரிவேரே. 25

சுந்திரமாய் கேள் மாணுக்கா, பாரிர்சொல்லு மகாதிசை, தானு டற்றிசையே அந்தலெக்கங்கொண்டு தானே நீயும் அன்பாய் பெருக் கிட இன்பமாய் வருகும் பெருக்கும். 26

இதிலே மாரகஞ் சொல்வேன் கேளாய், பாரில் ஏர்க்குமாடித ன்னில் ஜெனித்தோருக் கெல்லாம், பதியுபொன்கரி மாலுமுடவன் றிசைபருகச் சேய்புகரு யிர்த்திசைத் திசையதிர் சேரில். 27

வெருவியே மாரகஞ்செய்வார் இதில், மேவுந் திரிரெண்டில் ரரி நின்றேனும், வருக உடலதாய்தானே எட்டில் மன்னுமேழிலபம் நின்றவருடலாம். 28

சேர்வத் திசைதன்னிற்றனே, யிவன் செல்லுவனே எமபுரந் தன்னையே நாடி, ஏறதனிர் ஜெனித்தோர்க்கே குருவும், இழிவுமதி சேயுமுடற் றிசையாக. 29

காரிபுகர் மாலுமுயிராய் அதிர்கலந்து, திசையுமோடக்குமே யாகில் மாரியே எமதூதாள் வந்து மாபதிக் கேகுவ ரின்னமுங் கேளே. 30

எட்டேபத்தி லிருமூன்றில் நின்றேனிவர்களுடற் றிசையாகவருக முட்ட, விரண்டில் முன்நான்கில் ஏழில் மோதுவரு இராக்கூட்டினர் கொல்வர். 31

தண்ணிடிர் ஜெனித்தோர்க்கு த்தானே, சான்றேன் சேயுடலா கத் தானுமேவருக, கொண்டபுகர் மதிமாலுந் திசைகூரு முயிராகிக் கூடிடிர்க் கொல்வர். 32

எட்டிலாரிற் பத்திராரில் நின்றேன் நிவர்கள் திசையுமுடலாக வருக, சட்டமாதிரி ரெண்டிலாரில் நின்றேன், றனுமுயிர்த்திசையா கிவே கொல்வன். 33

நண்டிற் ஜெனித்தோர்க்குத்தானே பொன்னும் நண்ணுலே கரி மாலும் நாடவே உடலாய் கொண்ட புகருயிரவி சேய்ந்திசைகுன்னி உயிராகிக் கூடிடிர் கொல்வர். 34

இரண்டா ரெட்டினில் நின்றேன் 'உடல், நேருந்திசையாக தி சைக்கேறுவின் குந்திரியாய் பேரில் நின்றேன், மேவவிருதிசையொ க்கவே கொல்வன். 35

அரியிர் ஜெனித்தோர்க்குத் தானே கரியானபுகர் குருவுடல தாய்வருக, அருணமதி யுயிராகிகூட அப்பவே கொல்லுவ ரந்த புசிப்பில். 36

நாலி லாறிர்பத்தில் நின்றோன், உட ல் நண்ண விரண்டி லு எழி லுமூன்றிர் சாலநின்றவ னுயிராக கூடத்தப்பாமர் கொல்லுவதனை யறிவாயே. 37

கண்ணிமீதிர் ஜெனித்தோர்க்கே, குருகனலோன் மதியுமுடற் றிசையாக மன்னிகரி புகர்மாலும் ரவி மருகி யுயர்த்திசையாகிடிர் கொல்வர். 38

நாலில் இரண்டாரில் நின்றோன் அவர், நாடற் உடற்றிசையாக வருக, கோளிமூன்றில் நாலிற்பத்தில் நின்றான் குன்னுமுயிர் திசை யாகிடல் கொல்வர். 39

சாதிர்க்கோலிர் ஜெனித்தோர்க்கே, குரு தணலோனிரவி மதி தானுடலாக பாதிபிரை புகர்மாலும், உயிர் பண்புடன் திசையாகி லன்புடன் கொல்லும். 40

ஆரில் மூன்றில் எட்டில் நின்றோன், உடலாகித் திசைவருக தன்னுடனே கேள்மாரி எழிரண்டில், பத்தில் நின்றோன் மருகியுயி த்திசையாகிடிற் கொல்வர். 41

தேளிர் பிரந்திடுவோர்க்குப்புகர் செப்பும் கரிமாலு முடலதாய் வருக, வாழுங்குரு விரவிசேயு மிவர் வருக, உயிர்த்திசைமாரகஞ் செய்வர். 42

இரண்டேழிலே மேரிலெட்டில் நின்றோ, இவர்களுடற் றிசை யாக வருக, கொண்டதிரி யாரிபத்தில் நின்றோன் கன்னியுயிர்த்திசை யாகிற் கொல்வர். 43

வில்லிலுதித்தோர்க்குத் தானே கரிமேதை உடற்றிசையதாய் வருக, சொல்லுங் குருசேயு இவர்தோன்றி வுயிர்த்திசையாகில் மர ணம். 44

குடும்ப சப்தம துர்ணரோகந் தன்னில் கூடினவர் உடற்றிசைய தாய் வருக, விப்பங்ந் திரிரவிபத்தில் நிர்ப்போர், மருகியுயிர்திசை யாகிடிர் கொல்வர். 45

ஈலெயிர் செனித்தோர்க்குத்தானே. பொன்னுஞ் செப்புமதிமா லுமுடலதாய் வருக, மலையொற்றபுக ரிரவிசேயும் இவர்வருக, உயி ர்திசைமாரகஞ் செய்வார். 46

இரண்டிமூன்றி லெட்டிலேழில் நின்றோன் நேத்தியாயுடற் றி சையாக வருக, கொண்டு வியமாயம் ரோகம் மேரிர் குன்னு வோர் னுயிர்த்திசையாகிடிர் கொல்வர். 47

சாலிர்:ஜெனித்தோர்க்குத் தானே ரவிசந்திரன், சேர்க்கரியுடற் றிசையாக வருக, மாலுங்குருமே யுயிரின்றிசை வருகவே யக்காலமா ரகங்கூரே. 48

மீன்த்திர் ஜெனித்தோர்க்கு தானே, புகர்மேதை இரவிகரி யுடற்றிசையாக, கோனுமாலுஞ் சனிசேயு மிவர்கூடிட வுயிருகவொ ல்வர் தப்பாமல். 49

இரண்டெட்டி லாரினிலாரில் நின்றோ, இவர்களுடற் றிசையாக வருக, விரண்டவேழிர் பத்திலாபம் மீதில் ஏகுவோருயிராகி விரப்பன் தப்பாமல். 50

சுக்கிரநாடி சோதிட ஆனந்தகளிப்பு

குருசிஷியர் தாக்கம்

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

# சுக்கிர நாடி சோதிடம்.

## க வது லக்கினபாகம்.

லக்கினுதிபதி பலவந்தனுய் சுபகிரகத்தோடே பார்க்கப்பட்டு கேந்திரத்திலிருந்தால் தீர்க்காயிசு உண்டாம், இராஜப்பிரதாபமும் லக்ஷுமிகடாக்ஷம் உண்டாகியும், நோவில்லாமலும், சரீரத்தில்பளுவில்லாமலும் பிழைப்பன்.

லக்கினுதிபதி சுபகிரகத்துடனே கூடி உச்சவம்ஷத்திலே யிருந்து கேந்திரதிரிகோணங்களிலே சுபக்கிறகங்களினுலே பாற்கபட்டு ௰-மிடத்துக்குடையவனுடனே கூடி ஆக்ஷியிலிருந்தால் நல்லபாக்கியமும், கீர்த்தியும், தனதானியமும், தீர்க்காயிசும் உண்டாம்,

லக்கினுதிபன் பலவந்தனுய் சுப கிரகத்தினுலே பார்க்கப்பட்டு சுபர் அம்ஷத்திலேயிருந்தால் ௱ - வயது யிருப்பன், தேவேந்திரனைப் போல போகபோக்கியமுண்டாம், குபேறனைப்போல ஆயிஸ்பதியம் உண்டாயிப் பிழைப்பன்.

லக்கினுதிபன் பத்தாமிடத்திலே யிருந்து லக்கினத்தில் றாகுகேதுவிருந்தால், வெகுபாபியாயிருப்பன். அ-மிடத்துக்குடையவன் றாகுவுடன்கூடி லக்கினத்திலிருந்தால் மாலேயிட்டுப்பிறப்பன். கேந்திரத்தில் றாகுவும், குளிகனுமிருந்து லக்கினுதிபதி அஷ்ட்டமாதிபதியுடன் கூடி பாவதிரேககாணம் உதிக்க, மாலேயிட்டுப்பிறப்பன்.

லக்கினத்தில் பாவக்கிரகம் பலவந்தனுயிருக்க சனி, செவ்வாய், சூரியன் இவர்களிலொருவன்பார்க்க மாலேயிட்டுபிறப்பன்.

லக்கினுதிபனுவது லக்கினத்தையாவது புதன்பார்க்க மற்றப்படி சுபக்கிரகங்களாவது புருஷக்கிரகங்களாவது பாராமலிருக்க சண்டனுவன்.

லக்கினுதிபதி பாவருடனேகூடி பிலயீனனுயிறுக்க சரீரத்துக்கு சௌக்கியமில்லாமல் கஷ்ட்டப்பட்டு பிழைப்பன், சுபக்கிரகம்பார்த்தால் சுகமாய்பிழைப்பன்.

லக்கினுதிபன் கேந்திரதிரிகோணங்களில் பிலயீனனுயிருந்து லக்கினுதிபனின்ற ருசி ராயதிபதியும், நாசதானத்திலேயிருந்தால் ரோகவானுய், தடித்தசரீரமாய், உதிரரோகம், நேத்திரரோகம், இப்படிக்கொத்த ரோகங்களோடே சரீரத்தில் பிலவீனனுய் பிழைப்பன்.

லக்கினுதிபதியிருந்த நவாம்ஷாதிபதி ராகு, செவ்வாய், குளிகனுடனே கூடியிருந்தாலும் முன்சொன்னபடி பிழைப்பன்.

லக்கினுதிபதி செவ்வாயாக லக்கினத்தில் பாவக்கிரகம் கூடியாகிலும் பாற்கலமாகிலுமிருந்தால் கல்லேயுடைத்துப் பிளேப்பன் புண்வியாதிகளினுலே அனுபவிப்பன்.

லக்கினத்தில் கேதுவிருந்து லக்கினுதிபன் பாவகிரகத்துடனேயும், ருகுவுடனேயும்கூடி லக்கினத்தைப் பார்த்தால் பிசாசுபீடையும், வயற்றுநோயு மிப்படியிருப்பன்.

ஐந்துநாழிகைக்கு மேல்ப்பட்ட லக்கினத்தை லக்கினுதிபதிபார்த்தாலும் ஆகாது, ஐந்துநாழிகையுள்ள லக்கினங்களுக்கு லக்கினத்திலே சுக்கிரனிருந்தால் சரீரம் உணர்ந்திருப்பன்.

லக்கினத்திலே சூரியனிருந்து செவ்வாய் பார்த்தாலும் ருகுகேதுவிருந்து செவ்வாய் பார்த்தாலும் சுவாசரோகம், க்ஷயரோகம், பாண்டுரோகம், குன்மரோகம் முதலானவியாதிகள் உண்டாயிருக்கும்.

லக்கினத்தில் செவ்வாயிருந்து சனி-சூரியன் பாற்க சூரியனுலே பிடிக்க ரோகம்.

லக்கினுதிபதி உறைந்த கிரகத்துடனேகூடி லக்கினத்திலிருந்தால் உறைந்தசரீரமாம். உறைந்த கிரகமாவது சனியும் சூரியனும் தேய்பிறைச் சந்திரனுமாம்.

லக்கினுதிபதி சுபக்கிரகத்துடனேகூடி லக்கினமும் சரருசியானுல் சரீரம் பருத்திருப்பன்.

லக்கினத்திலே சுபக்கிரகமிருக்க பாற்கயிருந்தால் வாலீபத்திலே சுகத்தைப்பெறுவன்.

இந்தப்படி பாவமிருந்தால் துக்கத்தை அடைவன். லக்கினுதிபன் உச்சவம்ஷத்திலே மித்துருக்ஷேத்திரத்திலே நட்பிலே நல்லதிரோகணத்திலேயிருந்தால் யென்னுளும் சுகத்தை அடைவன்.

லக்கினத்திலும், பனிரெண்டாமிடத்திலும் நற்கோளிறுக்க லக்கினுதிபதி கேந்திரத்திலிருக்க வியாளம்பாற்க ஆதியும் மத்திபமும் சௌக்கியம். அந்தியத்தில் துக்கம்.

லக்கினத்திலும் உ-ரு-லும் நற்கோளிறுக்க லக்கினுதிபனும் சுபக்கோளாக சுக்கிரன் பலவந்தனுய்ப்பிறந்தால் ஆதியிலும், அந்தியத்திலும் சுகம். மத்திபத்தில் துக்கம்.

வியாழன் கேநதிரத்திலிருக்க லக்கினுதிபன்பலவந்தனுயிருந்தால் வாலிபத்திலேசுகம்.

சுக்கிரனும் லக்கினுதிபதியும் பலவந்தனுய் லக்கினத்தை சுபக்கிரகம்பார்த்தால் மத்திபத்திலேயும், அந்தியத்திலேயும் சௌக்கியம.

லக்கினத்தில் சுபக்கிரகமும், உ-லும், கேந்திரத்திலும் பாவர்யிருக்க, லக்கினுதிபன் அவர்கொத்தவங்கிஷத்திலிருந்தால் முற்பாகத்தில் துக்கமும், பிற்பாகத்தில் சௌக்கியமுமாக நடக்கும்.

லக்கினுதிபன் பாவருடனேகூடி கேந்திரத்தில் ருகுவும் ய - லே பாவருமிறுக்க, நீசக்கிரகமாவது, சூரியனுவது லக்கினத்தைப் பாற்க துற்கீர்த்தியுள்ளவனுவான்.

லக்கினுதிபனும், கூ-க்குடையவனும் ஆரோக்கிய பலத்திலிறுக்க, நற்கீர்த்தியுள்ளவனுக துறைகளாலே கொண்டாடப்படுவான்.

லக்கினத்தில் சுக்கிரனிறுக்க, ச-டு-ல் பாவர்யிறுக்கப் பிறந்தால் ஆதியிலே சுகம். அந்தியத்திலே துக்கம்.

லக்கினுதிபதி உ லிருந்து ய-ல் பாவரிருந்து லாபாதிபதி லாபத்திலிருந்தால் உய-வயதுக்குமேல் சுகம்.

லக்கினுதிபனின்ற ராசியாதிபதி கேந்திர திரிகோணங்களிலிறுந்தால் உ0-வயதுக்குமேல் சுகம்.

லக்கினுதிபன் சுபறுசியிலிருந்து சுபக்கிரகத்தினுலே பாற்கப்பட்டு நல்லவம்ஸைஷயிலிருந்தால் யசு-வயதுக்குமேல் சுகம்.

சரறுசிக்குமுன்-ரு திரறுசிக்கு நடு-ரு உபையறுசிக்குக்கடை-ரு இது அவர்க்கொத்தவம்ஸைஷ லக்கினபாகம்-முற்றும்.

# உ - ஆமிடம்.

இரண்டாமிடத்ததிபதி சுபக்கிரகமாய் கேந்திரம் நட்-பாக்ஷி-யுச்சம் மித்துரு திரேக்காணம் நல்லவற்சற வீட்டிலே யிருந்தால் நல்லபுண்யவான். இதற்கு லக்கினதிபதி பலவந்தனுயிருக்கவேணும்.

உ-ஆமிடத்திலே நட்-பாக்ஷி-யுச்சத்திலே சுபர்யிருக்க, சுபற்பார்க்கயிருந்தால் குடும்பசவரக்ஷணைசெய்வான், அனேகம்பேரை ரக்ஷிப்பான். நல்லபுண்ணியவான்.

உ-ஆமிடத்தில் சுக்கிரன் நட்பாக்ஷி யுக்ஷத்தோடு மிருந்தால் அனேகம்பேரை ரக்ஷிப்பான். சுக்கிரனுகிலும், புதனுகிலும், உ-க் குடையவனுகிலும், மித்துரு-திரேக்காணத்திலிருந்தாலும், உ-ஆமிடத்திலிருந்தாலும் பரவுபகாரியாயும், அனேகம்பேறை ரக்ஷிக்கப்பட்டவனுயுமிருப்பன்.

உ-க்குடையவன் கூ-லே யிருந்து நல்லபுருஷகிரகத்தினுலே பார்க்கப்பட்டாலும், ச-லே நட்பாக்ஷியுச்சங்களிலே யிருந்தாலும் தன்வங்கிஷத்துக்குயெல்லாம் கார்த்தவனுவன்.

உ-க்குடையவன் நட்பாக்ஷியுச்சங்களிலே திரிகோணமேறியிருந்தும், லக்கினதிபன் பலவந்தனுயிருந்தும், உ-க்குடையவனிருந்த ராசியாதிபதி கேந்திரத்திலிருந்தால் சகலருக்குமதிபதியாவன்.

குடும்பாதிபதி பரமோக்ஷத்திலேயிருக்க, குடும்பாதிபதியையாகிலும், உ-ஆமிடத்தையாகிலும் வியாழம்பார்த்தாலும், உ-ஆமிடத்தில் லக்கினுதிபதியும், வியாளனும் பலவந்தனுயிருந்தாலும் ஆயிரம்பேரைரக்ஷிப்பான்.

வியாளன் சிங்காசனவங்கிஷத்திலும், சுக்கிரன் கோபுர அங்கிஷத்திலும், அயிராபத அங்கிஷத்தில் உ-க்குடையவனுமிருந்தால் கணக்கில்லாதபேரைரக்ஷிப்பான்.

உ-க்குடையவன் பாவருடனேகூட உ-லே பாவர்யிருக்கப் பாற்க லக்கினதிபதி பிலவீனனுய் பாவருடன்கூடி ஏற்கப்பட்டிருந்தால்தன்னுடையபிளைப்புக்கு ஒருத்தன்கீளிருந்து பிளைப்பன்.

உ-ஆமிடத்திலே வெகுபாவசம்மந்தமிருக்க உ-க்குடையவன் பாவகிரகத்தினுலே பாற்கப்பட்டு பிலவீனனுயிருந்து லக்கினதிபதி பாவ
ரு டனேகூடி நாசதானத்திலிருந்தால் கஷ்டப்பட்டு பிளைப்பன்.

உ-க்குடையவன் கேந்திரத்திலிருக்க, அவனேசுபர்பாற்க, உ-லே சுபர்யிருக்க சசுமுகனுயிருப்பன்.

உ-க்குடையவன் கேந்திரத்து நட்பாக்ஷியுச்சங்களிலே யாகிலும் தன்னுடைய அங்கிஷத்திலேயாகிலும யிருந்தாலும் விநோதமாயிருப்பான்.

உ-லே பாவரிருந்து அதற்குடையவன் சு-அ-கஉ-ல் பாவருடன் கூடி அதிநீசங்களிலிருந்து பாவர்பார்த்தால் துர்மாற்கனு யிருப்பான்.

உ-க்குடையவன் குளிகனுடனே கூடியிருக்க உ - ஆமிடத்தில் நீச்சதுற்பாவக்கிரகமிருந்தால் மகாகோபி வெகுபாவி.

உ-க்குடையவன் புதனுடனேகூடி கேந்திரதிரிகோணங்களிலே நட்பாக்ஷியுச்சமேறி சுபராலே பாற்கப்பட்டு புருஷகிரகத்துடனேயாகிலும், புதனுடனேயாகிலும் கூடியிருந்தால் நல்லயுக்திசாலியாயும், சாதுரியவானுயுமிருப்பன்.

உ-க்குடையவன் கேந்திரத்திலிருக்க, அந்தராசியாதிபதி மாரகாங்கிஷத்தில் பறமோக்ஷமேறியிருக்க, சிங்காசனவங்கிஷத்தில் வியாளனுகிலும், சுக்கிரனுகிலும் உ-லே யிருந்தால் புதன் நல்லவம்ஷத்திலிருக்க நல்லவாக்குடையன், சாதுரியன்.

உ-க்குடையவன் வலுவந்தனுய் அவற்கொத்த வங்கிஷத்திலேயிருக்க, உ-ஆமிடத்தில் வியாளன் பர்வதாங்கிஷத்திலிருக்க, உ-க்குடையவன் சுக்கிரனுடனும், புதனுடனும்கூடி நட்பாக்ஷியுச்சங்களில் அயிராபத அங்கிஷமேறியிருந்தால் தனவானுகியும் கோலாகலனுகியு மிருப்பன்.

உ-க்குடையவன் பாவருடனேகூடி க0-லே நீச்சதுர்மோடனுயிருந்தாலும், அல்லது-குளிகனுடன்கூடி உ-லே சூரியனிருந்து பாவர் பார்த்தால் அசடன்.

உ-க்குடையவன் லக்கினத்திலே உச்சக்கிரகத்துடன்கூடி பலவந்தனுயிருந்தால் பொழுதுவிழுந்து கண்தெரியாது.

உ-க்குடையவன் உச்சசூரியனுடனேயாகிலும், லக்கினுதிபதியுடனேயாகிலும் உ-அ-கஉ-லே யிருந்தால் பிறக்கும்போதே குருடனுய்பிறப்பன். கஉ-ல் செவ்வாயிருந்தால் இடக்கண்சாயும். சனியிருந்தால் வலக்கண்சாயும்.

உ-ஆமிடத்தில் பாவர்யிருந்து அதற்குடையவன் சுபர் திருஷடியுண்டாகியிருந்தால் தடைக்கண்ணனுவன்.

லக்கினுதிபதி பாவருடன்கூடி காரகன் பலவந்தனுயிருந்து இவர்களிருக்கும்ராசியை உ-ம் கிரகம்பாற்க, உ-க்குடையவனிருந்த அம்ஷாதிபதி பாவருடனேயிருந்தால் நேத்திரரோகம்.

உ-க்குடையவன் பாவர்வீட்டிலேயிருக்க, அவனே சனி-சூரியன்-குளிகன்-செவ்வாய் இவர்கள்பாற்க நேத்திரரோகம்.

உ-க்குடையவன் சூரியன்-செவ்வாயுடனே கூடியிருக்க, அல்லது அவர்களாலே பாற்கப்பட கடைக்கண் செவ்வரிபோன்றிருக்கும்.

உ-க்குடையவன் சுபனுய் லக்கினுதிபதியுடன்கூடாமலும், பாற்கப்படாமலுமிருந்தால் பெருங்கண்ணுயிருக்கும்.

உ-க்குடையவனும், சு-க்குடையவனும்கூடி லக்கினத்திலிருந்து லக்கினுதிபதியாலேயும் பாற்கப்பட்டால் ராஜகோபத்தில் கண்பறிபட்டுப்போம்.

இவர்கள் இந்தப்படியிருக்க சுபர்பார்த்தால கண்ணோய்-நேத்திரநோய்-நேத்திரவாய்வுமுண்டாகும்.

உ-க்குடையவன் ராகுவுடனேகூடி சு-லிருந்தாலும், அல்லது-ராகுவிருந்த ராசியாதிபதியுடன்கூடி சு-லிருந்தாலும் தந்தரோகம், பல்விழுந்துபோம்.

உ-க்குடையவன் சனி-சூரியனுடனேயும் மற்றும் பாவருடனேயும் கூடியிருந்தால் பயமும்-துக்கமும்-தரித்திரமும் உண்டாம்.

செவ்வாயுடனே கூடியிருந்தால் கண்ணுக்கு உடன் பீடையும், ராஜபயமும், மனேசஞ்சலமும் உண்டாயிருப்பன்.

உ-க்குடையவனும், சு-க்குடையவனும்கூட அவர்களிருந்த அம்ஷாதிபதியும் இந்தப்பிரகாரம்கூட தன்னுலே தனக்கு தனம்கெடும்.

உ-க்குடையவனும் லக்கினுதிபதியும் ஒன்றுய்க்கூடிகேந்திரித்து பரமோக்ஷ அங்கிஷத்தில் சுபர்திருஷ்டியுண்டாயிருக்க வாலிபத்திலே வெகுதனமுண்டாயிருக்கும்.

க-உ-கக-ல் சுபர்யிருக்க, நட்பாக்ஷியுச்சங்களிலே விசாஅங்கிஷத்திலிருக்க, உ-க்குடையவனிருந்த அம்ஷாதிபதி உச்சவம்ஷத்திலிருக்க வாலிபத்திலே வெகுதனலாபமுண்டாயிருக்கும்.

லக்கினுதிபதி உ-லேயும், உ-க்குடையவன் கக-லேயும், லாபாதிபதி லக்கினத்திலேயுமிருந்தால் வெகுதிரவியலாபம்.

எல்லாக்கிரகங்களும், லக்கினுதிபனும் பலவந்தனுய் வியாளத்தினுடனே கேந்திரித்து உ-லிருந்தும், உ-க்குடையவன் பீஷாஅம்ஷத்திலேயிருந்தால் தன்னிடபிலத்தினுலேதான் தனம்தேட வல்லவனுயிருப்பன்.

லக்கினுதிபனின்ற ராசியாதிபதி எந்தஸ்தானத்தி லிருக்கிறுனே அந்தராசிக்குடையவன் பலவந்தனுய் நட்பாட்சியுக்ஷகேந்திர திரிகோணங்களிலேயிருந்தால் தனத்தைத்தேடுவான்.

லக்கினுதிபனுக்கு தனுதிபதி கேந்திர திரிகோணங்களி லிருக்க, உ-பேரும் நட்பாக்ஷியுச்சங்களில் சுபக்கிரகங்களுடனேகூடினுல் தன் கைமேல்பட தனம்தேடுவான்.

தனுதிபன் லக்கினுதிபனுக்கும், லாபாதிபனுக்கும், கேந்திரதிரி கோணங்களிலிருந்து காலப்பலனுண்டாயிருக்கிர சுபராலே பாற்கப்பட்டால் மத்திபவயதிலே தனம்தேடுவான்.

உ-க்குடையவனிருந்த ராசியிலே லக்கினுதிபதியாவது, சுபராவதுயிருக்க அதற்குடையவன் லக்கினத்தில் பலவந்தனு யிருந்தாலும், அல்லது-லாபாதிசனிருந்தாலும் அந்திரவயதிலே லாபமுண்டு.

உ-க்குடையவனும், ௬-க்குடையவனும் பலவந்தனுய் புருஷகிரகத்தினுலே பாற்கப்பட்டு உ-பேரும் ஒன்ருகக்கூடியிருந்தாலும், அல்லது-ஒருவருக்கொருவர் பாற்கப்பட்டிருந்தாலும் சகோதர திரவியம் கிடைக்கும்.

தனுதிபனே லக்கினுதிபன்பார்த்தாலும், கூடினுலும் வெகுதனலாபமுண்டாயிருக்கும்.

உ-க்குடையவனுக்கு சகோதரகாரகனுவது, சகோதரஸ்தானுதிபதியாவது இவர்கள் சம்மந்தமுண்டானுல் சகோதரதிரவியம்.

௪-க்குடையவன் சந்திரன் யிவர்கள் சம்மந்தமுண்டானுல் மாதுருதனம்,

ரு-க்குடையவன் வியாழம் யிவர்கள் சம்மந்தமுண்டானுல் களத்திரதனம், அஷ்டமாதிபதி சனி யிவர்கள் சம்மந்தமுண்டானுல் நீச்ச

தனம் அல்லது கடன்வாங்கினதனம், கூ-ஆமிடத்தான் சூரியன் இவர்கள் சம்மந்தமானால் பிதுர்தனம். க0-க்குடையவனுடன் கூடினுல் சரீரப்பிரயாசையாலுண்டான தனமும்கிடைக்கும்.

சந்திரன்சேர்ந்தால் பயிர்செய்தும், செவ்வாயிக்கு வாயாடியாலும், புதனுக்கு வித்தையினுலும், வியாழனுக்கு தான் பிடித்த காரியம் ஜெபத்தினுலேயும், சுக்கிரனுக்கு பெண்டுகளாலேயும், சனிக்கு நீசர் சண்டாளர் யிவர்களாலேயும், ராகுவுக்கு தானதர்மம்தீர்த்தயாத்திரையாலேயும், கேதுவானுல் திருட்டினுலேயும், கக-ஆமிடத்தில் நற்கோளிருந்தால் நல்லநியாயத்தினுலேயும், வக்கிரகமிருந்தால் பாவத்தினுலேயும்லாபம். கஉ-ஆமிடத்திலே கஉ-சம்மந்தமுண்டானுல் பலவந்தமானதனம் கிடைக்கும்.

கூ-அ-கஉ-க்குடையவர்கள் பலவந்தமாயிருந்து அவர்கள் சம்மந்தமுண்டாயிருந்தால் முன்சொன்னபடியாம்.

அவர்கள் தீற்பயாயிருந்தால் சத்துருவாலேயும்,கடன்காரர்களாலேயும், விருதாவிலேயும் தனத்துக்கு அழிவுண்டாம்.

இந்த கஉ-பாகத்துக்குடையவர்கள் பலவந்தனுய் நன்மையாய்க் கூடிப்பார்த்தால் இவர்களினுலே தனலாபம் அல்லாமலும், நீச்சதுற்மோடராயிருந்து நாசதானங்களிலேயிருந்து கூடினுலும், பார்த்தாலும் அவரவர்கள் முகாந்தரத்தினுலே தனநாசமுண்டு.

லாபாதிபன் ஜலக்கிரகமாய் பலவந்தனுயிருக்க, உ-க்குடையவனும், சலராசி நவாங்கிஷத்திலிருக்க, லக்கினமும் சலராசியாக, அ-க்குடையவனும், சலராசியிலிருந்தால் தீவாந்திரதனம்கிடைக்கும்.

லக்கினுதிபன் பிலவீனனுயிருக்க, உ-க்குடையவன் கஉ-லாவது அஷ்டமத்திலாவது நீசனுயிருந்து சுபர்திருஷ்டியில்லாமலிருந்தால் அவனுடைய திரவியமெல்லாம் ராஜாக்களுக்குச்சேரும்.

கஉ-க்குடையவன் உ-லேயிருக்க, லாபாதிபன் கஉ-லேயிருக்க, தனுதிபதி நீசதானத்தை அடைந்தால் ராஜதெண்டத்தாலே தனச்சேதம். மற்றபாவப்பலனும் அந்தந்த மூலத்தினுலே நடக்கும்.

உ-க்குடையவன் பாவக்கிரகத்துடன் கூடியிருக்க, கக-க்குடையவனும் இந்தப்படியிருக்க தனமேகிடையாது.

கஉ-க்குடையவனிருந்த நவாம்ஷாதிபதி உ - க்குடையவனுடன் கூடினாலும் பார்த்தாலும் நீசராசி, மூடராசி, கேந்திரராசியிலிருந்த போதிலும் ஒருபணமுங்கிடையாது.

உ-க்குடையவன் க0-க்குடையவனுடனே கூடியிருந்தால் நினைத்தபோது தனமுண்டாகும், க0-க்குடையவனிருந்த அம்ஷாதிபதியுடன் உ-க்குடையவன் கூடினாலும் இந்தப்படி சொல்லுக.

கக-க்குடையவன் க0-க்குடையவனுடன் கூடினாலும் மேற்கண்டபலன்சொல்லுக.

லக்கினாதிபன் உ-லேயும், லாபாதிபன் க0-லேயும், உ-க்குடையவன் நல்ல அம்ஷத்திலேயுமிருந்தால் பணம்படைத்தவனென்று கீர்த்தியுண்டாம்.

லக்கினாதிபதி உத்தமாங்ஷத்திலிறக்க, அவனை குருவாகிலும், லாபாதிபதியாகிலும் பார்த்தால் ஆயிரம்பொன் தேடுவான்.

லக்கினாதிபதியிருந்த நவாம்ஷாதிபதி கோபுராங்ஷத்திலிருந்து, ௰-க்குடையவனாலே பார்க்கப்பட்டால் உ000-பொன் தேடுவான்.

க0-க்குடையவனிருந்த நவாம்ஷாதிபதி, சத்தமாம்ஷாதிபதி பலவந்தனாய் குரு-சுக்கிறனாலே பாற்கபட்டால் ரு000-பொன் தேடுவான்.

லக்கினாதிபனிருந்த திரிகோணாதிபதி அவனிருந்த சத்தமாம்ஷாதிபதி உத்தமாங்ஷத்திலிருந்தால் க0000-பொன் தேடுவான்.

இந்தலக்கினத்துக்கு நவாங்ஷத்தைப் பிரித்து ஓராங்ஷத்துக்கு சென்றதுக்கு தள்ளிச்சொல்லவும்.

க0-க்குடையவனிருந்த நவாம்ஷாதிபதி யெங்கேயிருப்பானோ அவனிருந்த சத்தமாம்ஷாதிபதி, கேந்திர திரிகோணத்திலே பலவந்தனாய் உ-கக - லக்கினம், இந்தப்பதியாளோடேகூடி உத்தமவம்ஷையிலேயிருந்தால் க00000-பொன் தேடுவான்.

நாலுகேந்திரத்திலும் சுபர்இருந்தால் உ00000-பொன் தேடுவான்.

நாலுகேந்திரத்திலும் பாவர்யிருந்தால் நாற்கால்ஜீவனைப் புணருவான்.

லக்கினம் உ-ச-கூ இதுகளில் சுபக்கிரகங்கள் உச்சமாயிருந்தால் கோடிக்குமேலும் திரவியம் படைப்பான்.

# மூன்றாமிடம்.

கஉ-அ-சு இந்தஸ்தானங்களில் செவ்வாயும், சகோதிரஸ்தானாதிபதியுமிருக்க, பாவக்கிறகம் வக்கிரித்துபார்க்க சகோதிரமில்லே, பாவக்ஷேத்திரத்திலிருந்து பாவக்கிரகத்தோடே கூடி சுபகிறகத்தினாலே பாற்கப்பட்டால், சகோதரமுண்டாயி நாசமாகும்.

ஙு-மிடத்தில் பாவமிருக்க, அல்லது பாவதிருஷ்ட்டியானாலும் உண்டாயிறுக்க, ஙு-மிடத்துக்குடையவன் பாவருடனேகூடியிறுக்க, சகோதரனாசம்.

ஙு-மிடத்தில் சுபரிறுக்க, சுகற் பாற்க ஙு-மிடத்துக்குடையவன் பலவந்தனாயிறுந்தால் பிரரது லாபம்உண்டு, காறகனும், மதிபனும், சுபயோகத்துடனேகூட திரிகோணாதிபதிகளுடன்கூட சகோதரலாபம்.

லக்கினாதிபன் பலவந்தனாய் நாசத்தானத்திலே பாவமிறுக்க, செவ்வாய் பாவருடன்கூடி ச-மிடத்திலாவது, லக்கினத்திலாவதிருந்தால் மறுதாய்பெற்றசகோதிரம்.

லக்கினாதிபனும், ஙு-மிடத்துக்குடையவனும், உறவானால் சகோதிரம் உறவு, பகையானால் அப்படியே பகையாயிருப்பார்கள்.

பிதுர்காறகனும், பிதுர்தானாதிபதியும், ஓசைராசியிலாவது ஓசையாங்ஷத்திலாவது யிருக்க, புருஷக்கிறகம்பார்க்க,ஙு-மிடத்திலே ஓசைக்கிரகமிறுக்க பின்னாலே ஆண்பிறக்கும்.

ஙு-மிடம் இந்தப்படிபார்த்துக்கொள்ளவும், இக்குமராசி பாவதுருக்கமாவங்ஷமாவது இந்த தானாதிபனேயும் திட்டம்பார்த்து யெல்லாக்காறியங்களுக்கு மிப்படிபார்த்துக்கொள்ளவும்.

பிதுருஸ்தானபதிபன் யெந்தராசியிலிருந்தானோ அதைப்பிடித்து அம்ஷையளவாயெண்ணி இத்தனேசகோதிரமென்று கண்டுக்கொள்ளவும்.

சகோதரஸ்தானாதிபதி உச்சந்திலிருந்தாலும் கண்டதுகையை ஙு-ல் பெறுக்கவும், ஆக்ஷியிலிருந்தால் ரட்டித்துக்கொள்ளவும், சத்துருக்ஷேத்திரமானால் ஙு-க களேயும், நீசமானால் பாதியாக்கவும், அதிநீசமானால் ச-க கூட்டவும்.

ஙு-மிடத்தில் அவனிட அம்ஷை இத்தனே அம்ஷையென்றறிந்து, அந்தராசியும் மேஷமுதல் இத்தனேராசியென் றறிந்து, ராசியும்

அம்சையும் பெருக்கி, அந்தவீட்டுக்குடையவன் காறமுங்கூட்டி அந்தவீட்டிலிருந்தவன் சாறமுங்கூட்டி அந்தனாளில் சகோதரமென்று சொல்லவும்.

௩-மிடத்தில் கிரகமில்லாவிட்டால், அந்த ௩-மிடத்துக்குடையவன் யெங்கேயிருக்கிரானென்று பார்த்து அவன் அம்ஷத்தைப்பெருக்கி அதினுடனேகூடின கிறகங்களில் சாறமும் கண்டுகூட்டி முன்போலே சொல்லவும்.

௩-மிடத்துக்குடையவன் லக்கினாதிபதியாயிருந்தால், சகோதரர்களிருந்த ராசியைதொட்டு அம்சையினாலும் பெருக்கி இந்தப்படி பார்த்துச்சொல்லவும்.

௩-பேரும் சமனானால் ௩-பேரையும் பெறுக்கிச்சொல்லவும், ௫-௭-௯ இவர்களைக்கொண்டு புத்திரபலன் சொல்லவும்.

௫-க்குடையவன் சுபர்களுடன் ஆயிந்திலிறுக்க, வியாளமாகிலும் சுபக்கிறகமாகிலும் பார்க்க புத்திரபலனுண்டாம்.

## நாலாமிடம்.

௪-க்குடையவன் கேந்திரதிரிகோணங்களில் உச்சனாயிறுக்க, பாவக்கிரகங்கள் பார்க்கப்படாமல் ௪-மிடத்தில் வியாழனிறுக்க, அல்லது ௪-க்குடையவன் வியாழனுடன்கூட பார்க்கயிறுந்தால், பந்துக்கள் ௪-பேறுக்கு பெரியவனாயிறுப்பன்.

அந்தஸ்தானங்கள்யெல்லாம் பாவசம்மந்தமாயிருந்தால் பந்துக்களாலே சண்டையும், வெறுப்பும், பந்துநாசமும் யிப்படியாம்.

௫-௪-க்குடையவர்கள் கூடி ௯-லிருக்க இவன்தகப்பன் அன்னியஸ்திரீ சஞ்சாரன், தன்னுடைய ஸ்திரீயிடத்தில் பிரியங்குறையும்.

லக்கினாதிபதியும் ௪-௬-௯-க்குடையவர்களும் ஒருவிடத்திலே கூடினாலும், அந்த அம்ஷத்திலே கூடினாலும், சோரபத்தாவுக்குப் பிறந்தவன்.

௪-லே பாவர் ஜாஸ்தியாயிருக்க, மாதுருகாறகன், மாதுருதானாதிபதி பாவராலே பார்க்கப்பட,லக்கினாதிபதிக்கு ௪-மிடத்தான் இளைப்பமாயிறுக்க, சத்தியமாய் சோறமிதாவுக்குப் பிறந்தவன்.

ச-க்குடையவன் ராகுவுடனேகூடி சனி-சூரியனாலே பாற்கப்பட்டாலும், அல்லது ச-க்குடையவன் அம்ஷாதிபதியாயி யிந்தப்படியிருந்து, ராகு கேதுவுடனேகூடினல் நீசனுக்குப்பிறந்தவன், சனியானல் சூத்திரன், புதனால் வசியன், சூரியன்-செவ்வாயானல் க்ஷத்திரியன், குரு-சுக்கிறனானல் பிராமணன், இந்தப்படிக்கி அந்தந்த கிரகங்கள் அடையாளங்கள் அறிந்து அங்கமடையாளம் சொல்லவும்.

ச-க்குடையவன் பலவந்தனய் குரு-சுக்கிரன்-புதனலே பாற்கபட்டு அவற்கொத்த வம்ஷைகளிலிருந்தால் பதிவிரதைக்குப்பிறந்தவன்.

ச-க்குடையவன், சூரியன் செவ்வாயுடனே கூடி பாவ அம்ஷத்தில் சுபதிருஷ்ட்டியில்லாமல் அவர் ரோகபாக்கியிலே யிறுக்க, நித்தம் பிறயாசப்பட்டு வயறுவளப்பன்.

சூரியனும் செவ்வாயும் நீச்சசத்துருமூடாய் ச-மிடத்திலே பாவராலே பாற்கப்பட்டு யிறுக்க, அந்த ச-மிடத்துக்குடையவன் பாவர் அம்ஷத்திலேயிறுக்க, வீடு-வாசல் - பணமில்லாமல் தரித்திரனயிறுப்பன்.

புதன்-சனி ச-லே யிறுக்க, வியாளன் பிலவீனனயிறுக்க, ச-க்குடையவனும் பிலவீனனயிறுக்க, வீடு வாசல்யெல்லாம் உண்டு துக்கம்பெறுத்திருக்கும்.

ச-க்குடையவன் கேந்திரத்திலே பலவந்தனயிறுக்க அவனை சுபர்பார்க்க, அவனுக்கு நல்ல வீடு-வாசல் லாபமுண்டாயிறுக்கும்.

ௐ-ச-லே சுபற் பலவந்தனயிறுக்க, ச-மிடத்துக் கதிபதியும் பலவந்தனயிருக்க, மேல்மச்சு-காறைவீடு இந்தப்பிறகாரம் உண்டாயிருக்கும்

க0-க்குடையவனும் ஒன்றுய்க்கூடியிருக்க, ச - லே சனியிருக்க விச்சித்திரமான உப்பிரிகை-மாடமாளிகை-கூடகோபுற முண்டாயிருக்கும்.

ச-க்குடையவன் நாசதானத்திலிருக்க, ச-லே சனியிறுக்க, விச்சித்திரமான உப்பரிகைஉண்டாம்.

ச-லே பாவர்யிருந்தால் வீடு-வாசல்யில்லாமல் புக்கிப்போம்.

ச-க்குடையவன் சுபருடன்கூடி ச-லேயும் சுபர்யிருந்து செவ்வாயும் பலவந்தனயிருந்தால், பயிர்-பச்சை-வெள்ளாமை-பூமிபலிதமுண்டாயிறுக்கும்.

ச-லேயும் பாவர்யிருந்து செவ்வாயும் நீச்சமூடத்திலே யிருந்து ச-க்குடையவனும் பிலயீனனுனல் வெள்ளாமை விளைச்சலில்லே, பணத்தைக்கொண்டு தின்பன்.

சந்திரனும்-சுக்கிரனும் பலவந்தனுய் சுபர்களாலே பாற்கப்பட்டு, சுபர் அம்ஷத்திலேயிறுக்க, ச-க்குடையவனும் பலவந்தனுயிறுக்க மாதாவுக்கு தீர்க்காயிஸ்.

ச-க்குடையவனும்-சந்திரனும் பாவருடன்கூடி ச - மிடத்திலேயும் பாவர்யிறுக்க வாலீபத்திலே மாதர் அறிஷ்டம்.

லக்கினத்தில் வியாளனும்-சுக்கிறனும் ச-லே பாவருமிருந்தால் கபடில்லாதவன், நல்லவாகன லாபம்உண்டு.

வியாளன் ச-லே யிருந்து லக்கினேஸ்பறனும் கூடியிருந்தால் அஸ்வலாபமுண்டு.

ரு-மிடத்தானும் கூ-மிடத்தானும் கூடினுல் பல்லக்குடையவன்.

ம-க்குடையவன் கூடினுல் சமஸ்தமான வாகனமுண்டு.

இந்தப்படி ச-மிடத்திலே பாவசம்மந்தம்-சுபசம்மந்தம் அறிந்து ச-மிடத்துக்குச் சொன்ன பலன்களைச்சொல்லவும்.

ச-மிடத்திலே சந்திரனும்-சுக்கிரனும் பர்வருடனே கூடியிறுக்க பாவராலே பாற்கப்பட, பாவாம்ஷத்திலே பாவர்யிறுக்க, அவரோகணமாயிருந்நால், மூறைமைதப்பி புணருவான்.

சந்திரனுடனே பாவர்கூடி, பாவற்பாற்க, ச-லே சூரியனும் மற்றப்பாவருமிறுக்க, இவர்களை பாவற்பாற்க, தாய்க்குச்சமானமான பேறை புணருவன், சக்களத்தி தாயைவசீகரிப்பன்.

லக்கினத்துக்கும் எ-க்கும் அதிபதிஒருத்தனுக, ச-எ-க்கும் ஒருத்தனுகவிருந்தாலும், அல்லது எ-க்குடையவன் லக்கினத்திலேயும் லக்கினுதிபதியினுலேயும் ச-க்குடையவன் எ-லேயுமிருந்தால் மாதாவுக்குச்சமானமானபேறை புல்குவன்.

இவர்களெல்லாம் பாவராயி இத்துடன் சந்திரனும் கூடினுல் தாயைப்புணருவானென்று சொல்லலாம்.

எ-க்குடையவன் சுக்கிரனுடனே கூடி ச-லிருந்து ௬-க்குடையவன் பாவக்கிரகத்தினுலே பாற்கப்பட்டால் சகோதரியை புணருவன்.

—*—

# ஐந்தாமிடம்.

ரு-க்குடையவன் சுபருடன்கூடி ரு-லிருக்க வியாளமாகிலும் சுபக்கிரகமாகிலும் பாற்க புத்திரலாபமுண்டு.

லக்கினதிபதி ரு-லிறுக்க, ரு-க்குடையவனும்-வியாளமும் பலவந்தனயிறுக்க, புத்திரலாபமுண்டு.

லக்கினதிபதியும் - புத்திராதிபதியும் சுபகிரகத்தினலே பாற்கபட்டாகிலும்-கூடியாகிலும் கேந்திரத்திலிறுந்து உ-க்குடையவன் பலவந்தனயிருந்தால் புத்திரலாபமுண்டு.

ரு-ல் உ-க்குடையவனிறுக்க, அவனை வியாளம்பாற்க புத்திரலாபமுண்டு.

எ-க்குடையவனிறுந்த நவாம்ஷாதிபதியை கூ-க்குடையவன் உ-மிடத்துக்குடையவன் நவாம்ஷாதிபதி நின்ற கூ - க்குடைய நவாம்ஷாதிபதியை உ-க்குடையவனும்-லக்கினத்துக்குடையவனும் பாற்க, புத்திரலாபமுண்டு.

ரு-மிடத்தில் பாவக்கிரகமிறுக்க, அதற்குடையவன் பாவறுடனேகூட வியாளனும் பாவசம்மந்தமாயிறுக்க, புத்திரநாசம்.

கூ-உ-எ-க்குடையவர்களிறுந்த நவாம்ஷைக் கதிபதிகள் பாவகிரகத்தோடே கூடியிருந்தாலும், அல்லது பாவாம்ஷத்திலேயிருந்தாலும், புத்திரநாசம்.

ரு-க்குடையவன் பாவ அம்ஷத்திலிருந்து, நீசமூடக் கிரகத்துடனேகூட எ-மிடத்தில் பாவக்கிரகம் பாற்க, புத்திரநாசம்.

ரு-க்குடையவன் லக்கினத்திலேயும், லக்கினதிபனின்ற அம்ஷாதிபதி ரு-லேயும் வியாளனிருந்த அம்ஷாதிபதி கேந்திரத்திலேயுமிருந்தால், புத்திரலாபம்.

லக்கினத்திலே சந்திரனிறுக்க, அதற்கு எ-மிடத்தில் வியாளனிறுக்க, செவ்வாய்-சனி இப்படிக்கொத்த பாவக்கிரகம் ச-மிடத்திலிறுக்க, பிறந்தான்பிள்ளைப் பெறப்போகிறதில்லை.

லக்கினத்திலே பாவக்கிரகமிறுக்க, ரு-லே சந்திரனிறுக்க, லக்கினதிபதி ரு-லிறுக்க, புத்திரதானதிபதி பலனில்லாமல்போக அவன் வங்கிசம் நாசமாய்ப்போகும்.

தேய்பிறை வானத்திலிறுக்க, வியாளன் அஸ்தமானத்திலிறுக்க சனி வீட்டிலிறுந்தாலும், ரு-கூ-ல் பாவறிறுக்க, புத்திரனுக்கு புத்திரனில்லாமல்போகும்.

ரு-மிடத்தில் புதனிறுக்க, லக்கினத்திலேயும் ச-லேயும் பாவற்யிறுக்க, திரிகோணங்களில் சுபற்யிறுக்க, பிள்ளைமுகம் காண்பதில்லை.

லக்கினத்திலே செவ்வாய் க்ஷேத்திரமாய் செவ்வாயிறுக்க, றந்திரமென்று சொல்லப்பட்ட அ-லே சனியிறுக்க, ரு-லே சூரியனிறுக்க, கடைக்காலத்தில் புத்திரனுண்டு.

சந்திரனுக்கும்-சூரியனுக்கும் திரிகோணங்களிலே செவ்வாயும் சனியுமிறுக்க, வியாளம்பார்க தத்துபுத்திரன்.

சூரியனை பாவற்பாற்க, லக்கினத்தில் செவ்வாயிருக்க, புத்திரனுலும் செத்துப்போம். யிவர்களை வியாளம்பார்த்தால் தீர்க்காயிசு உண்டு.

மற்ற சுபர்பார்த்தாலும் தாய்செத்துப்போன பிள்ளையையெடுத்து வளற்பான்.

சுபக்கிரகம் பாராவிட்டால் அதுவும் செத்துப்போம்.

புத்திரதானதிபதியும் - புத்திரகாறகனும் நடுவிலிருந்த கிரகங்களையும் ராசியும்கூட்டி, யித்தனைபிள்ளையென்று சொல்லவும்,

வியாளனின்ற ரு-மிடத்திலே யெத்தனைபிந்து யிருக்கிறதோ அதில் நீசமூடவிந்துகலைந்து நின்றசேடம்பார்த்து பலத்துக்குத்தக்கினப்போல் பெறுக்கி, யித்தனைபேரென்று சொல்லலாம்.

லக்கினதிபதியும் ரு-க்குடையவனும் சத்துருவானல் சத்துரு-மித்துரு, ரு-லே புருஷசம்மந்தமிறுக்க, புருஷக்கிரகம்பாற்க, ஆண்பிள்ளைப்பெறும்.

ரு-க்குடையவன் லக்கினத்திலிக்க, பாற்க, லக்கினதிபதி ரு-லிறுக்க, அவன் குருபுத்திரன்.

ரு-க்குடையவன் ரு-லிருக்க, லக்கினதிபதிபாற்க, செவ்வாய்-குருகளாலே பாற்கப்பட தினமும் தகப்பனை திட்டுவான்.

## ஆறுமிடம்.

சீனச்சந்திரன் ராகுவுடனே பார்க்கப்பட்டு ஆறாமிடத்திலிருந்தால், கள்ளர் தலையைவெட்டிக்கொண்டு போவார்கள்.

சு-அ-கஉ-ல் சந்திரனிருக்க லக்கினாதிபதி அவனை பார்க்க, சனி குளிகன் யிவர்களுடன் கூடியிருக்க, துற்மரணம்.

சனி சத்துருவீட்டிலே நீசனனமானம் லக்கினாதிபனிருந்த திரிகோணாதிபதி, சனிகுளிகனுடனேகூடி சனி அவர்களைபார்க்க, கட்டி விழுந்து மரணம்.

சு-லே சூரியனிருக்க, சு-க்குடையவன் பாவருடனேகூட சூரியனைபார்க்க, பித்தரோகம்.

இந்தப்பிரகாரம் சந்திரனிருக்க வாதரோகம், செவ்வாயிருக்க ரத்தபித்தம், புதனிருக்க சிலேத்துமவாதம், வியாழனிருக்க ஆரோசிகம், சுக்கிரனிருக்க மூலரோகம்-வயற்றுக்கழிச்சல், சனியிருக்கக் குன்மரோகம், ராகு கேதுவிருக்க பிசாசுபீடை.

சு-லே சனி-செவ்வாயிருக்க, ராகு-சூரியன்பார்க்க தீர்க்கரோகம், சலராசியிலே சு-மிடத்திலே சந்திரனிருக்க அந்தவீட்டுக்குடையவன் சலராசியிலிருந்து இவர்களைபார்க்க மூத்திரகிருச்சிகம்.

சு-லே சந்திரன், அ-லே சனி, கஉ-ல் பாவக்கிரக மிப்படியிருக்க, பீனிசரோகம் சு-க்குடையவன் அ-லே யிருக்க, நீசக்கிரகமும் பாவக்கிரகமும்கூட சத்துருநாசம்.

சு-மிடத்தை சுபக்கிரகம்பார்க்க, சு-க்குடையவனை சுபக்கிரகம் பார்க்கப்படச் சத்துருவில்லை.

லக்கினாதிபதி சு-லிருந்து சு-க்குடையவனும் ஒன்றாய்க்கூடி பாவக்கிரகத்தினாலே பார்க்கப்பட்டாலும் அல்லது கஉ-மிடத்தானுடனே கூடினாலும், பார்க்கப்பட்டாலும், தாயாதிகள் விரோதம்.

சு-க்குடையவன் வியாழனாகயிருந்தாலும், வியாழனுடனேகூடினாலும், ஒருதுக்கமும் ஒருரோகமுமில்லாமல் சுகமேயிருப்பன், அனேகந் தாயாதிகளுண்டாயிருக்கும்.

சு-க்குடையவன் குரூரஅம்சத்தில் நீசமூடராய், பாவக்கிரகங்களுடனேகூடி சுபர்பாராவிட்டால், தாயாதிநாசனம்.

சு-க்குடையவனும்-லக்கினாதிபதியும் ஒன்றாய்க்கூடியிறக்க அவனை சனி-செவ்வாய்-ராகுகள் பார்க்க தாயாதிபீடை.

லக்கினாதிபதியும் சு-க்குடையவனும் பலவீனனாகயிருந்தால், தாயாதிக்கெல்லாம் சிரேஷ்ட்டனாவன்.

சு-க்குடையவன் சு-லேயிருந்து சு-மிடத்துக்குடையவனாலே தான் பார்க்கப்பட்டாலும், அல்லது சு-க்குடையவர்கள் சனி-செவ்வாயாக, அவ்விடத்தில் சனி-செவ்வாயிறக்க, கள்ளராலேயும்-அக்கினியினாலேயும் தனாசம்வரும்.

சு-லே சுபர்யிறுக்க, சுபர்பார்க்க, சு-க்குடையவன் சுப அம்ஷத்திலேயிறக்க, நல்ல சுகபோஜனமுண்டாம்.

சு-க்குடையவன் சுக்கிரன்-குருவுடன்கூட தித்திப்புமேல் பிரியன், செவ்வாயோடேகூட ராகு-கேதுக்களினாலே பார்க்கப்பட்டால் ராக்ஷதபோஜனம்கொள்வன்.

---

## எழாமிடம்.

எ-மிடத்தில் சுக்கிரனிருந்தால் கொங்காறியாவன் புதனிருந்தால் பறதாரத்தையிச்சிப்பன், வியாழனிருந்தால் தன் ஸ்ரீயினிடத்தில் மோகம், சனியிருந்தால் பொல்லாத ஸ்ரீயும் பலஸ்ரீயும் உண்டாம், செவ்வாயிருந்தால் கண்ட ஸ்ரீகளையெல்லாம் அனுசரிப்பன்.

உ-மிடத்தில் சூரியனிருந்தாலும் பறஸ்திரீ சம்போகம் பண்ணுவான் உ-எ-சு-க்குடையவர்கள், சுக்கிறனுடனேகூடி பாபக்கிரகத்தினாலே பார்க்கப்பட்டு, லக்கினத்தி லிருந்தால் பறஸ்திரீகளை சுற்றிக்கொண்டு பொல்லாதவனாய் திரிவன் சுபர் திருஷ்டியிருந்தால் யிந்தப்பலன் சொல்லவேண்டாம்.

லக்கினாதிபதியும், சு-க்குடையவனும் பாவசம்மந்தமா யிருந்தால் பரஸ்ரீ சங்கம்.

எ-க்குடையவன் ராகு-கேதுவுடனேகூடி பாபகிரகத்தினாலே பாற்கப்பட்டிருந்தால் ஒன்றுக்கொன்று நம்பிக்கையில்லாமல் சோரபுத்திவரும்.

கo-எ-உ-க்குடையவர்களாவது இவர்களில் ஒருவனாவது, ச-வீட்டிலிருந்தால் ஸ்திரீகவனமுள்ளவன்.

ரு-எ-க்குடையவர்களை சு-மிடத் தான்பார்க்க தன்பெண்சாதிக்குப் பிள்ளையில்லை சுபர் பார்க்கில் தோஷமில்லை.

எ-க்குடையவன் பாவருடனேகூட உ-மிடத்தைசெவ்வாய்பார்க்க அந்தக ஸ்திரீக்கு பிள்ளையுண்டு.

க-ரு-எ-சு-க்குடையவர்களெல்லாம் அ-மிடத்தில் பின்பெலனுயிருக்க, ரு-மிடத்தில் சுபக்கிரகம்பார்க்க உடனே கலியாணமுண்டாம் ஒருத்தருக்குப் பிள்ளையில்லை.

தேய்பிறைச் சந்திரன் பாவருடன்கூடி ௬-லேயிருக்க பரஸ்திரீகாமி.

எ-க்குடையவன் ராகுவுடனேகூடி சர்ப்ப திரிகோணத்தி லிருந்தால் மைந்தன் மறணம்.

எ-க்குடையவன் குளிகனுடனேகூடி சர்ப்ப திரிகோணத்திலேயிருந்தால் பெண்சாதி கைவசத்திலே மறணம்.

உ-க்குடையவன் ஆட்சியிலிருக்க, எ-க்குடையவனும் ஒண்டியாய் ஆட்சியிலிருக்க ஒருகுடும்பம், எ-வீட்டுக் கிரகங்களுடனேகூடின சம்மந்தமும் அத்தனை குடும்பமென்று சொல்லலாம்.

எ-க்குடையவன் வக்கிரித்து சகடாக யிருந்தாலும் லக்கினத்திலிருந்தாலும் அனேக குடும்பமுண்டு.

லக்கினதிபன் அ-லே சரராசியிலிருக்க, உ-லே பாவரிருக்க உ-குடும்பம். சனி-செவ்வாய் ராகுவுடனேகூடி சுக்கிறனிடத்திலாவதிருக்க பாவராலேபார்க்க, உ-குடும்பம்.

உ-லாவது எ-லாவது பாவதிருஷ்டியுண்டாகி இந்த தானத்துக்குடையவர்கள் பெலவீனனானால், உ-குடும்பம் உண்டு.

எ-அ-ல் பாவரிருக்க, கஉ-ல் செவ்வாயிருக்க களத்திர ஸ்தானாதிபன் மறைந்திருக்க உ-௩-யென்று சொல்லலாம்.

உ-லாவது எ-லாவது வெகு பாவயோகமிருக்க, எ-க்குடையவன் பாவராலே பார்க்கப்பட, ௩-குடும்பம்.

லக்கினத்திலும், உ-லும் எ-லும் பாவரிருக்க, எ-க்குடையவன் நீசரூடனாயிருக்க.

ரு-குடும்பம்லக்கினாதிபன் க0-லிருக்க, புதன் பலவந்தனாயிருக்க எ-மிடத்துக்குடையவனுக்கு ரு-மிடத்தில் சந்திரனிருக்க, வெகு ஸ்திரிபோகம்.

எ-லே வியாழனிருக்க, சுக்கிரன் பலவந்தனாக உ-க்குடையவன் நட்பாட்சியுச்சத்திலிருக்க, நல்லரூபவதியுண்டாம். வெகு சந்தோஷத்தை அடைவன்.

கூ-க்குடையவன் எ-லிருக்க சிங்காசன வங்ஷத்தில் சுக்கிரனும் கோபுரா அங்ஷத்தில் சந்திரனுமிருக்க, இந்த யோகத்தில் பிறந்தவன் மகா போகவானாகியும், ஆடல் பாடல் வல்லவனாகியும், பிரியமுண்டாகியும்,க00-குடும்ப முண்டாகியும் சிங்காரவனங்களிலேயும் உப்பரிகைமேலேயும் பெண்டுகளுடனே விளையாடி திரிகிறவனாயும் மன்மதனாகியு மிருப்பன்.

எ-க்குடையவனிருந்த அம்ஷாதிபனின்ற அம்ஷாதிபதி சுபக்கிரகத்தோடேகூடி பர்வாதாங்ஷத்தில் பலவந்தனாயிருந்தால் க00-குடும்பயோகம்.

சுக்கிரனிருந்த அம்ஷாதிபதி யிருந்த ராசிக்குடையவனின்ற அம்ஷாதிபதி கேந்திரத்திலே மித்துரு அங்ஷம் கோபுர அங்ஷத்திலிருந்தால் உ00-குடும்பம்.

எ-க்குடையவன் கோபுர அங்ஷத்திலிருக்க க0-க்குடையவன் எ-லிருக்க உ-க்குடையவன் பலவந்தனானால் க0-குடும்பம்.

எ-க்குடையவன் பலவந்தனாய் வியாழனுடன் கூடியாகிலும் பார்க்கப்பட்டாகிலு மில்லாவிட்டால் இந்தப்பிரகாரம் சுக்கிரனாகிலுமிறக்க ஏகம் மத்திபம் விரதம்.

எ-க்குடையவன் வியாழனாயிருந்து சுக்கிரனும் புதனும் பார்த்தாலும் அல்லது எ-ல் வியாழனிருந்தாலும் பதிவிரதை.

எ-ல் ராகு-கேதுவிருந்தால் பிறசஞ்சாரமுள்ளவள், பாவக்கிரகம் பார்த்தால் பொல்லாத துஷ்டரோடே சஞ்சாரம்பண்ணுவாள்.

அந்த ராகு-கேது பாவ அங்ஷத்திலிருந்தால் புருஷனை விஷம் வைத்து கொல்லுவாள் உலகத்திலே துர்க்கீர்த்தி உண்டாம், பொல்லாத மரணமுண்டாம்.

கன்னி-விருஷிகம்-ரிஷபம்-சிங்கம்-இந்தராசியில் பிறந்த பெண்ணுக்கு அற்ப புத்திரன்.

எ-ல் சூரியனிருந்தால் தன் வயதுக்கு மூத்தப்பெண்ணை மணம் புரிவன்.

சந்திரனிருந்தால் சம ஸ்திரி, செவ்வா யிருந்தால் றுதுவானபெண், புதனுனல் வேதியன்பெண், குருவிருந்தால் பிராமணப்பெண், சுக்கிரனிருந்தால் பிள்ளையுண்டான ஸ்திரி, சனியிருந்தால் யீனஜாதி நோக்காட்டு ஸ்திரி, ராகு-கேதுயிருந்தால் சூஸ்திர கெற்பிணி, இந்தப்படி. ௪-மிடத்தி லிருந்தாலும் சொல்லலாம்.

௪-கேந்திரத்திலேயு மிருந்தால் நாற்கால் ஜீவனைப்புணருவன், சூரியன் சந்திரன் செவ்வாய், ௪-மிடத்தி லிருந்தால் மாடு ; மரியாதி, எ-ல் ராகுவும் ௪-ல் செவ்வாயு மிருந்தால் முன்சொன்ன பலன்.

எ-க்குடையவன் சனியாக அவனை சுக்கிரன்கூட பார்க்க அந்த சனி-சுக்கிரன் வீட்டிலிருக்க உபஸ்தம் நக்குவன்.

௧0-க்குடையவன் சனியினுலே பார்க்கப்பட்டு மேஷ விருசூகங்களில் சுக்கிரனுடன்கூடி யிருந்தாலும் உபஸ்தம் நக்குவான்.

லக்கினதிபதி நீசராசியிலே சுக்கிரனோடே கூடினல் அதற்கு மூர்தின பலன் அடையவன்.

செவ்வாயானலும் அவ்விடத்தில் செவ்வா யிருந்தாலும் மேல்வீடு-மூலை-சந்து வீட்டுக்குடையவன்.

சனி-ராகுவுடனேகூடினலும் அவ்விடத்தில் சனியிருந்தாலும் விழுந்த மூலை-சூரிய சம்மந்தமானல் கடினமாயும் சந்து நீண்டிருக்கும் மற்றப்பேருக்கு நல்ல வட்டத்தனம்.

எ-மிடத்துக் குடையவன் பெலமுண்டாயி சுபக்கிரகமானல் தாமரைப் பூப்போலே யிருக்கும்.

சந்திரன் சுக்கிரன் ; செவ்வாய் இவர்கள் எ-ல் சுபராசியி லிருக்கப்பார்க்க சீதள சரீரம் நன்றுயிருக்கும்.

சூரியன் - சுக்கிரன் - சனி - ராகு குளிகனுடன்கூடி ௭-க்குடையவர்களாய் பாவத்திலே யிருந்தால் குளகுளயென்றிருக்கும்.

௭-க்குடையவர்கள் குரு-சுக்கிரராய் சுபர் அம்ஷத்திலிருந்தால் நல்ல கலசமிருக்கும் பாவக்கிரக மிருந்தால்.

ஒவ்வாது ௭-லே யெல்லாம் பாவசம்மந்தமா யிருந்தால் அந்த வேலைக்கி சந்தோஷமில்லை.

௭-ல் பாவக்கிரகமிருந்து ௬-க்குடையவன் அ-ல் பொல்லாத சஷ்டி அங்ஷத்திலிருந்தால் மூத்திரச்சிறுச்சி.

# எட்டாமிடம்.

யெட்டுக்குடையவன் ஆட்சியிலிருந்தால் தீர்காயிஸ் சனி யிந்தப் பிரகார மிருந்தாலும் தீர்காயிஸ்.

௮-கிரகம் நட்பாட்சி உச்சியிலேயும் சனி நட்பாட்சி உச்சிலே யாவது கேர்திரத்திலாவ திருந்தாலும் தீர்காயிஸ்,

௪-அ-லே சுபக்கிரக மிருக்க லக்கினாதிபன் சுபகிரகத்துடனே கூட வியாழன்பார்க்க தீர்காயிஸ்,

லக்கினாதிபன் கேந்திரத்திலே குருசுக்கிரனுடன் கூடியிருக்க அவர்களினாலே பார்க்கப்பட தீர்காயிஸ்.

௮-௬-௧௧-ல் பாவமிருக்க கேந்திர திரிகோணத்திலே சுபமிருக்க லக்குனாதிபன் பலவந்தனானல் தீர்காயிஸ்,

௮-ல் கிரகம் உச்சமாயிருக்க அ-க்குடையவன் லக்கினத்திலிருக்க, அ-லே பாவமிருக்க, தீர்க்காயிஸ்.

அஷ்டமாதிபனும் சஷ்டாதிபதியும் பாவருடன்கூடி ௧௨-லிருக்க அந்தப்பிரகாரம் லக்கினாதிபனுமிருக்க அல்பாயிஸ்,

அ-௧௨-ல் பாவமிருக்க லக்கினாதிபன் பலனில்லாமல்போக அல்ப ஆயிஸ் புத்திரநில்லே சுபர் திருஷ்டியில்லாம லிருந்தாலும் இந்தப் பலன்.

லக்கினுதிபதி சூரியனுக்கும் அந்த நாளுடையவனுக்கும் நட்பினுல் தீர்க்காயிஸ், சமமானுல் மத்திபம் ஆயிஸ் பகையானுல் அல்பாயிஸ்.

லக்கினுதிபதி பிலயீனனுக செவ்வாயும் ௮-க்குடையவனும் ஒன்ருய்க்கூட சண்டையிலேயாகிலும் ஆயுதத்தினுலேயாகிலுக் மரணம்.

அ-க்கும் லக்கினத்துக்கும் உடையவர்கள் ராகு-கேது சனிகளோடேகூடி ச-மிடத்திலே யிருந்தால் திசா அந்திரங்களில் கள்ளர் கை ஆயுதத்தினுலே மரணம்.

அ-லே ராகு-கேது விருந்தால் பாவாந்த மரணம் சந்திரனிருந்தால் குதிரையினுலே மரணம்.

அ-லே சந்திரனும் ராகுவும் சனியுமிருந்து சந்திரபல மில்லாதிருந்தால் உம்மானத்தினுலே மரணம்.

அ-லே சந்திரன் சனியுடன்கூடி பலமில்லாதிருந்தால் ஜலத்தினுலே மரணம்.

அ-லே ராகு-கேது விருந்து நீசத்திலே சூரியன் அ-க்குடையவன்கூடி பொல்லாத சஷ்டி அம்ஷத்திலிருந்தால் ராஜகோபத்தினுலேமரணம் அத்துடனே தனநாசம்.

உ-பாவகிரகத்துடனேகூடி சந்திரன் லக்கினத்திலிருந்தால் அந்தப்பிள்ளை சீக்கிரத்தில் மரணம்

ஜெனனகாலத்துச் சந்திரன் கிரணமானுலும் பரிவேஷத்தானுலுமிருக்கில் சுபர் பாராமல் பாபர் பார்த்தால் க்ஷணத்தில் மரணம்.

௩-லே செவ்வாயானுலும் பாவக்கிரகமானுலு மிறுக்க பாவர் பார்க்க உடனே பிறந்த பிள்ளைக்கி கண்டம்.

அ-லே சந்திரனும் ச-லே பாவருமிருந்து இந்தச்சந்திரனே பார்த்தால் அந்தப்பிள்ளை பிழையாது.

அ-லே ௩-க்குடையவனுய் சந்திரனு மிருந்தால் மறுதாய் முலேயுண்டுப் பிழைப்பன்.

அ-லே வெகு பாவக்கிரக மிருந்தால் உ - சொல்லி மரணம் சுபர் கூடினுலும் பார்த்தாலும் தோஷமில்லே.

அ-க்குடையவன் பாலக்கிரகத்தோடேகூடி பாபராலே பார்க்கபட கோள்சொல்லுகிற புத்தியுண்டு சுபர் யிருந்தால் பிந்துயில்லை.

அ-மிடம் சரராசியானால் தூறத்திலே சாவான் திரராசியானால் தன் வீட்டில் மரணம். உபையமானால் நடுவழியில் மரணம்.;

லக்கினாதிபன் பலவந்தனாய் ச-கூ-க்குடையவன் பலயீனனாய் நாசதானத்திலிருக்க பிறந்தகையோடே மாதாபிதாக்கள் மரணம்.

கூ-க்குடையவன் பிதுர்காரகன் யிவர்கள் ரெண்டுபேரும் நாசதானத்தி லிருக்க பிறந்த பிள்ளை மூகம் தகப்பன் பார்க்கமாட்டான்.

சூரியனும் கூ-க்குடையவனும் சனிவீட்டிலிருந்தால் பிதுர் இறவிலே சாவான்.

இவர்கள் கூ-க்குடையவனுடனேயும் சந்திரனுடனேயும் கூடி சுபர் பார்க்கப்படாமலிருந்தால் பகலிலே பிதுர்சாவான்.

சுக்கிரனானாலும் சந்திரனானாலும் கூ-லே பலவந்தனாயிருக்க ச-க்குடையவன் சனியானால் மாதுர் யிறவிலே மரணம்,

ச-க்குடையவன் சனி அல்லாமல் சந்திரனும் சுக்கிரனும் வேறேயிடத்தில் யிருக்க பகலில் சாவாள்.

கேந்திரத்திலே சரராசியிலே அவர்களப்பனுக்கு அவர்களுதவுவார்கள் உபையராசியி லிப்படி யிருந்தால் இரண்டுநேரம் இரண்டுநாள் வேவன் தெற்பைகட்டிச் சுடுபவர்கள்.

கூ-க்குடையவன் பலவந்தனாய் லக்கினாதிபதி சந்திரன் ச-க்குடையவர்கள் பிலயீனரானால் கெர்பத்திலே பிள்ளை சாவான்,

# ஒன்பதாமிடம்.

சந்தான பாபகிரகத்துடன்கூடி கூ-லிருந்தாலும் அந்தப்பிரகாரம் சுக்கிரனிருந்தாலுய குருபத்தினியை வசிப்பன்.

கூ-க்குடையவன் அந்தச் சந்திரனுடனே வெள்ளியுடனேகூடி பாவசம்மந்த முண்டாயிருந்தாலும் அந்தப்பலன் சொல்லவும்.

கூ-க்குடையவன் நீசராசியிலாவது நீசவங்ஷத்திலாவ திருந்து சுக்கிரனுடன்கூடினல் இதுவும் அந்தப்படி பலன் சொல்லவும்.

கூ-க்குடையவன் சுபருடன்கூடி யெல்லாத சஷ்டி அங்ஷத்திலில்லாமல் விசேஷாங்ஷத்தி லிருந்தால் தனவானுகியும் திடமுத்தியுள்ளவனுகியு மிருப்பன்.

கூ-க்குடைவனிருந்த அம்ஷாதிபதி சுக்கிரனுடனே சந்திரனுடனேகூடி யிருந்தாலும் ராகு-கேதுவுடனேகூடி யிருந்தாலும் குருதுரோகம் செய்து குருபத்தினியை வசிப்பான்,

சீனச்சந்திரன், கூ-மிடத்திலே பாவக்கிரகத்துடனேகூடி யிருந்தால் தனக்கு மூத்த ஸ்திரியுடன் கூடுவான்.

சீனச்சந்திரன் நீச்சமாயிருந்து அவனிருந்த அம்ஸைஷயில் சுக்கிர்னிருந்தால் தனக்கு மூத்தவளைப் புணருவான் உறவுபேதமா யிருக்கும்,குருவன்னியனென்று சொல்லலாம்.

வியாழனுகிலும் சுக்கிரனுகிலும் நட்பாக்ஷியுச்சமாகக்கூடி கூ-லே யிருக்க அதர்க்குடையவன் பலவந்தனுக யிருந்தால் நல்லதனவானுகியும் பாக்கியவானுயு மிருப்பன்.

சுக்கிரனும் குருவும் புதனும்கூ-ல் அம்ஸைஷபெற்று கூ-க்குடையவன் சுபக்கிரகத்துடன்கூடியிருக்கதனஞ்செயனுவன்.

கூ-லே சுபர்யிருக்க கூ-க்குடையவன் பாவ அம்ஷமாக பொல்லாத சஷ்டி அம்ஷத்திலிருக்க டம்பத்துக்காக கர்மனுனம் செய்வான்.

கூ-க்குடையவனும் வியாழனும் சுபர் அம்ஸையிலே யிருந்து கூ-ல் சுபர் யிருக்க பார்க்க சுகிர்திரனுய் நல்லமணமுண்டாம் பாக்கியவானுயும் தனவானுயு மிருப்பன்.

௯-ல் பாவமிருக்க அ-க்குடையவனும் அப்படிபொல்லாத சஷ்டி அம்ஷத்திலிருக்க, ௯-ல் ராகு - சனியிருக்க, பாவாம்ஷத்திலிருந்து குளிகன் பார்க்க, அந்தக்குளிகனிருந்த ராசிக்குடையவன் குரூரனுயிருக்க, நல்லபிராமணனானாலும் சண்டாளனுவான், தர்மஞ்செய்வான் பாக்கியமில்லை கஷ்டப்படுவான்.

௯-க்குடையவன் சுபக்கிரகமாயிருந்து, சுபருடன்கூடி பார்க்கப் பட்டிருந்தால் பிதாசௌக்கியம்.

௯-க்குடையவன் குரு-சுக்கிரன் ஒருத்தராலேபார்க்கப்பட கூடியிருந்தால் பிதுரு தனமுண்டாயும், பிதுர் வாலீபத்திலே கஷ்டமும், பாவாம்ஷத்திலே - நீசத்திலே ௯-க்குடையவனும் சூரியனுமாக சனி-குளிகனுடனேகூட பிதுர் துக்கம்.

௯-க்குடையவனிருந்த சத்தவாம்ஷாதிபதி அவனிருந்த நவாம்ஷாதிபதியிருந்த அம்ஷங்களிலே நீச்சமூடராய் யிருக்க பிதுர் துக்கம்

௯-க்குடையவனும் - லக்கினுதிபதியும் சம்பூரண பலத்தோடேயிறுக்க, சூரியனும் பலவந்தனுக சுபக்கிரகத்தினுலே பார்க்கப்பட பிதாவுக்கு உடன்பட்டு நடப்பான்.

சூரியனுக்கு அ-ம் ராசி லக்கினமாக அல்லாவிடில் அ-க்குடையவன் லக்கினத்திலிருக்க, பிதுர்காறியத்துக்கு விரோதம்பண்ணுவான்.

சூரியனுக்கு ௧௦-மிடம் லக்கினமாக பிதாவுக்கு சமனுவன்.

சூரியனிருந்த நக்ஷத்திரத்துக்கு ௩-ம் நக்ஷத்திரத்தில் பிறந்தால் பிதுர்தனத்துக் குகந்தனுவன்.

சூரியனுக்கு ௬-மிடம் லக்கினமாக, பிதாவுக்கு சத்துருவாவன்.

சூரியனுக்கு ௯-உ - ம் லக்கினமானுல் பிதாசொன்னபடி கேட்டு நடப்பான்.

சூரியன் சத்துருநீசமூடங்களிலேயிறுக்க, அதற்கு ௯-மிடம் லக்கினமாகயிருந்தால் பிதாவுக்கு தோஷம்செய்வான், நற்கோணம்நோக்கில்-கூடில் தோஷமில்லை.

சூரியனுக்கு அ-க்குடையவனிருந்த நக்ஷத்திரத்துக்கு ௩-நக்ஷத்திரத்தில் பிறந்தால் பிதுர்கனம் நன்றாய்ச் செய்வன், அந்தப்படி

கஉ-மிடமானல் தூரதேசத்தில் பிதாதுக்கம், மற்றவிடத்துக்கெல்லாம் பிதுர்உண்டு.

கூ-க்குடையவன் கேந்திர திரிகோணங்களில் சுபருடன்கூடி பார்க்கப்பட்டு பலவந்தனுகயிருந்தாலும், சுபர் அம்ஷத்திலிருந்தாலும், தனதானியம் உண்டாகியும், பாக்கியவானுகியு மிருப்பன்.

உ-க்குடையவன் கக லேயும், கக க்குடையவன் கூ-லேயும்,கூ-க்குடையவன் உ-லேயும் இவர்கள் ௩-பேரி லொருவறை க௦-க்குடையவன் பார்க்க, மகா ஆயிஸ்பரியன்.

௩-க்குடையவனும் கூ க்குடையவனும் ஒன்றுகக்கூடி சுபராலே பார்க்கப்பட்டிருந்தால் சகோதரத்தினுல் பாக்கியம், இந்தப்படி ரு-சம்பந்தம் கூடினுல் புத்திரபாக்கியம்.

சு-அ கஉ-மிடத்துக்குடையவர்கள் இந்த சம்மந்தமானுல் பாக்கியசீனம்.

இந்த சு-அ-கஉ-க்குடையவர்கள் கூடியிறுக்க, குரு - சுக்கிரன் பார்க்க-கூட கூ-க்குடையவன் கூ-மிடத்தைப்பார்க்க, லக்கினத்துக்குடையவனும் உ-மிடத்துக்குடையவனும் பலவந்தனுயிறுக்க, பாக்கியவானுயிருந்து பிறகு பாக்கியசீனனுய் பிரகு பாக்கியம் வரும், யிதிலே ஒருதன் இளைப்பமானபோதிலும் அற்பபாக்கியம்வராது, இதுவெல்லாம் அந்த அதிபதிகளால் திசாந்திர திசைகளறிந்து சொல்லவும்.

க௦-க்குடையவன் கூ-லே யிறக்க கூ-க்குடையவன் வெகு பலவானுகி யிவர்களை குரு-சுக்கிறன்பார்க்க, சிவதியானம் ஆச்சாரமுண்டாயிறுக்கும்.

க௦ - க்குடையவனிருந்த அம்ஷாதிபன் யெங்கேயிருப்பானே அந்தராசிக் குடையவனிடத்திலே பாக்கியாதிபதி சம்மந்தமுண்டானுல் சிவத்தியானம் பண்ணுவான்.

க௦ க்குடையவனும், -க்குடையவனும், வெகு பலவந்தனுய் அவர்க்கொத்த அம்ஷத்திலேயிருந்தால், பிராமணர்விச்சளமுண்டாய் பிர்மக்கியானியாவன்.

கூ-க்குடையவன் நட்பாக்ஷி யுச்சத்திலிறக்க சுபர்பாற்க கூ-லேயும் சுபர்யிறுக்க, தானம்பண்ணுவான்.

கூ-க்குடையவன் அவர்கொத்தவம்ஷத்திலிறுக்க, வியாளன் பார்க்க, லக்கினாதிபதியை சுக்கிரன்பார்க்க, மகாதானம் செய்வன்.

கூ-க்குடையவன் ச-லே யிறுக்க, க0 க்குடையவன் கேந்திரத்திலிறுக்க, மகாதான்ம் பண்ணுவான்.

லக்கினாதிபதி லாபத்திலிறுக்க, க0-க்குடையவன் பலவந்தனாக யிவர்களை கூ-க-க்குடையவன் பார்க்க-கூட மகாதானம் வாங்குவான்

ரு-க்குடையவன்கூ - லே யிறுக்க, கூ-க0-க்குடையவனும் கூட லக்கினாதிபதியாலே பார்க்கப்பட்டால் தானமேற்பான்.

கூ-க்குடையவனிருந்த அம்ஷாதிபதி குரு - சுக்கிரனாலே பார்க்கப்பட்டால் குருபக்திஉண்டாகியிருக்கும், அல்லாமலும் பாவராலே பார்க்கப்பட்டால் குருதோஷம்செய்வான், இப்படி பார்த்துசொல்லவும்.

---

## பத்தாமிடம்.

க0-க்குடையவன் பிலயீனனாக பாவருடனே கூடியிருந்தால், துஷ்ட்ட சஞ்சாரம் செய்வான்.

க0-க்குடையவனாகிலும்-புதனாகிலும் அதிகபிலவானாய் க0-மிடத்திலிருந்தால் நல்லகியாதியான கற்மம்செய்வான்.

இப்படியிருந்தவர்களை பலவந்தனாய் சுபக்கிரகம் பார்க்குமாகில் விசேஷமான யெக்கியகர்மம் செய்வான்.

புதன்-வியாளன்-சுக்கிரன் இவர்களை பாபராலேபார்க்கப்பட்டு நாசதானங்களிலேயிருந்தால் கற்மனாசனம்.

அவர்களிருந்த அம்ஷாதிபதிகளும் இந்தப்பிரகார மிருந்தால், கர்மநாசனம்.

க0-லே ராகுவாகி அந்த அதிபதியாகியிருந்தால் கற்மனாசனம், கெங்காஸ்தானபலன்.

க0-மிட மீனமாகில், அதிலே நடகோளாகில், செவ்வாயிருந்தால் மூத்திகொடுக்கப்பட்ட கெங்காஸ்தானம்.

சறராசி க0-மிடமாக அதில் பூரணச்சந்திரன் வியாளனிறுக்க கெங்காஸ்தானப்பலன்.

௧௦-க்குடையவனுடனே கூடி கேந்திரத்தில் நட்பாக்ஷியுச்சங்களிலேயிருந்தாலும் கெங்காஸ்தானப்பலன்.

௧௦-லே வியாழன் - புதன்-செவ்வாய் இவர்களிருந்தால் திருப்பணிசெய்விப்பன், அந்த அதிபதியும் கூடினால் இந்தப்படி கோவில் செய்விப்பன்.

௧௦ - க்குடையவன் கோபுர அம்ஷத்தில் ௬ - க்குடையவனாலே பார்க்கப்பட்டிருந்தால் ஜலம் தோப்பு-தண்ணீர்பந்தல் செய்விப்பன்.

௧௦-லே சூரியனும்-செவ்வாயுமிறுக்க அதற்குடையவன் கேந்திரத்திலிருந்தால், திடுக்கனுய் யெல்லாறையுமிறட்டுவான்.

௧௦-லே ராகுவிறுக்க, அல்லது அ-லே யாவது ராகு-கேது-குளிகனிறுக்க, ௬ க்குடையவன் நீசனுகயிருந்தால் பொல்லாத கிளையுள்ளவன்.

௧௦-லே சந்திரனிறுக்க, வியாளன் அவனை பார்க்க, நல்ல அம்ஷங்களிலிறுக்க, நல்லகீர்த்தி உண்டாகியிறுக்கும்.

௧௦-க்குடையவன் சுபருடனேகூட சுபராலே பார்க்கப்பட சுபர் அம்ஷத்திலே யிறுக்க, நல்லகீர்த்திஉண்டாகியிருப்பன்.

௧௦-லே பாவரிருந்து அதற்குடையவன் பொல்லாத சஷ்ட்டி அம்ஷத்திலிறுக்க, அபகீர்த்திக்குடன்படுவான்.

௧௦-லே சூரியன்-சனி இவர்கள் பாவாம்ஷத்தில் பாவரால் பார்க்கப்பட்டு பாவருடனேகூடியிருந்தால் அபகீர்த்திக்குடன்படுவான்.

௧௦-லே சுபர்யிறுக்க அதற்குடையவன் சுபருடன்கூட நட்பாக்ஷியுச்சங்களிலிறுக்க, நல்ல அபிமானியாய் கீர்த்தியுண்டாவான்.

௧௦-ல் குருவாகிலும்-சுபராகிலும் ௧௦ - க்குடையவனுகிலுமிருந்தால் நல்ல அபிமானி.

௧௦-ல் பாவர்யிறுக்க, பாவர்பார்க்க, அதற்குடையவன் நீச அம்ஷத்தில் நீசருடன்கூட மானமில்லாதான்.

௬-க்குடையவன் ௧௦-லேயிறுக்க ௧௦ - க்குடையவனுடனே கூடி கேந்திர திரிகோணங்களிலேயிருந்தால், தாசதாசியர்களுண்டாயிறுப்பன்.

க0-க்குடையவன் ச-கிரகத்துடனேகூடி கேந்திர திரிகோணங்களிலிருந்து க0-லே ச-கிரகம் பலவந்தனுயிருந்தாலும் மோக்ஷமுண்டு.

லக்கினுதிபதியும் ஒருத்தருக்கொருத்தர் பார்க்க, மற்றக்கிரகங்கள் பாமலிரும் சன்னியாசியாவன்.

நட்பாக்ஷி யுச்சமில்லாமல் பிலயீனனுனுலும் இந்தப்பலன் சொல்லலவும்.

சனி திரிகோணத்திலே சந்திரனிறுக்க, அந்த்ச்சந்திரனை சனி பார்க்க சன்னியாசியோகம்.

இந்தப்படி சனி - செவ்வாயம்ஷங்களில் சனியினுல் பார்க்கப் பட்டு சந்திரனிருந்தால் அதுவும் சன்னியாசி யோகமென்றும் சொல்லவும்.

# பதினோருமிடம்.

கக-மிடத்தில் சுபர்யிருந்தால் சட்டைபிராதுருவர்த்தினையா யிருந்தால் சட்டைபிராதுருநாசம்.

அங்கேயிருந்த கிரகத்தினிட அங்கமடையலாம், திரேகானம் மரிந்து தனலாபம் சொல்லவும்.

லாபத்தில் பாவர்யிறுக்க லக்கினம் பாவலக்கினமாக மூத்தபிள்ளையாலும் பிறக்கும் கர்மாதிபதி பாக்கியாதிபதி னுசதானத்திலிருந்து லக்கினுதிபதி பொல்லாதவனுகயிருந்தால் மூத்தபிள்ளையாகிலும் சீமந்தகரும மில்லாமல் விற்கும் லாபஸ்தானம் 'சுபருக்கு நடுவாகலாபேசனம்.

சுபருக்கு நடுவாகபாவங்ஷத்திலுறுக்க தனலாப முண்டாம்.

லாபேசனிருந்த ராசியாதிபதி சுபகிரகத்திலிருக்கப் பட்டவனுக சுபருக்கு நடுவாகயிருந்தால் தனலாபம் உண்டாம்.

லாபாதிபனிருந்த அம்ஷாதிபன் சுபனுக கற்மாதிபதியாலே பார்க்க தனலாபமூண்டாம்.

லாபேசன் பாவக்கிரகம் சம்மந்தமானுல் தனக்கு சகானியாம் லாபஸ்தானம்.

சுபசம்மந்தமானல் மூத்தசகோதரம்தீர்காயிஸ் உண்டாம் பாவ சம்மந்தமானல் அன்பாயிஸ் மூத்த உடன்பிறப்புக்கு பிள்ளை இல்லை யென்று சொல்லவும்.

# பனிரெண்டாமிடம்.

கஉ - மிடத்தில் பாவரிறக்க அதற்குடையவனும் பாவராக இவர்களிரண்டுபேரையும் பாவர்பார்க்க பாவத்தினலே தனவிரையம்.

கஉ - க்குடையவனிருந்த அம்ஷாதிபதி சுபர்பார்க்க, சுபருடன் கூடி சுபராலேபார்க்கபட்டால் தர்மத்திலே தனவிரையம்.

கஉ - ல் குருசுக்கிரனிறக்க புதனும் சந்திரனும் பார்க்க அவர்க் கொத்த அம்ஷத்திலிருக்க தனமூலத்திலே தன்விரையம்.

கஉ - க்குடையவன் பிலயீனனய் சு-க்குடையவனுடனே கூட பார்க்க அல்லது குளிகன்ராகுவுடனே கூடசத்துரு மூலத்திலே தன விரையம்.

விரையாதிபதி கக-க்குடையவனுடனும் ௬-க்குடையவனும் கூடவே அந்ததிசையறிந்து விரையம் சொல்லவும்.

அ - க்குடையவனிடத்தில் கூடினல் யெல்லாம்கடன் கொடுத்த பக்கத்தில் வராது.

க0 - க்குடையவனுடன் கூடினல் தத்தம்பண்ணுவான்.

கஉ-க்குடையவன் பாவாரசியிலே பாவம்ஷத்திலே பாவருடன் கூடி பாவராலே பார்க்கபட நறகத்திலே வீள்வான்.

உ-ல் ராகுகேதுவிருந்தாலும் அஷ்டமாதிபதியிருந்தாலும் சு-க்குடையன் அவர்களைபார்க்க நறகப்பிராப்தி சந்திரன் சூரியன் பலவந்தனுக அவர்களிருந்த திரிதிகாம்ஷாதிபதி யிவர்களுடனே கூடி அவர்களுக்கு சமனயிறக்க சமலோகப்ராபத்தி உச்சமாகயிருந்தால் சொர்க்கலோகம்.

நீசமாயிருந்தால் நறகம் சுபகிரகம் உச்சமாய் கஉ-லிறக்க அவர்களை சுபக்கிரகம்பார்க்க நல்ல அம்ஷையிலிறக்க சொந்தலோகம்.

க0-க்குடையவனுலும் சுபகிரகத்துன் கூடிபார்க்கப்பட்டிருந்தால் சொர்கலோம் உண்டென்பதாம்.

சுக்கிர நாடி சோதிடம்.

முற்றிற்று.

கணபதிதுணை.

# சுக்கிர நாடி.

## சோதிட திரவுகோல்.

(1) தாயுந்தந்தையுந் திரணியிலேரிட
ஆயி *அப்பனும் அக்காளையேறிட
பாயுமேபறி பங்கங்குறைவிலா
மாயுமெகாலம் பிடர்பரி யோகமெ.

(2) அண்ணனுந் தம்பியுந் அக்காளையேரிட
வண்ணன் முன்பின்வலுவாயிருந்திட
கண்ணனெதி கோணங்களேரிட
எண்ணுமேபரியோகவான் சாதகன்.

(3) நிறைகுடத்தானும் நீலனுகூடியே.
குறைபடாதிரி கோணங்களேரிட
மறைபடாமல் வாணிகன் வலுத்திட
குறைபடாபரி யோகவன் சாதகம்.

(4) அரசன் கேந்திரன் கம்புமேயேரிட
வரிசையாகவே யெள்ளும் வளுந்துமே
அரியலாகுந்திரி கோணங்களேரிட
குறைபடாபரி யோகவான் சாதகன்.

(5) தாயுந்தந்தையுந் தட்டானை கூடியே
* ஆயுமப்பனும் கேந்திரமேரிட
பாயியியும் பறிபங்கங்குறைவிலார்
ஆறுபுலி ஆளுமறசனெ.

(6) அண்ணனுந் தம்பியும் கேந்திர மேறிட,
வண்ணனும் செட்டியும் வடிகனைகூடிட
கண்ணனெ முன்பின் வலுத்துயிருந்திட
நண்ணுமெபுவி ஆளும்மரசனெ.

(7) வட்டிதன்னில் குட்டது யேரிட
முட்டிக்கரசன் வலுத்திருந்திட
சட்டிமுன்பின் யிருக்கினுங்நோக்கினுங்
கெட்டி கெட்டி மனை கட்டிவாளுவான்.

(8) வாழையானை மரங்களும் கூடியே
தாழைபுன்னையுந் தேக்குமே கூடிட

காலையேதினம் யோகமுஞ் செல்வமும்
நாளை நாளைக்கியேறுமே யோகமே.

(9) கண்டாரட்டு பனிரெண்டில் சூரியன்
காரி சேப்பங்க ளூடராய் நின்றிட
அண்டிமாரக வறையிலுஞ் சாதகம்
ஆடை யாபரணங்களுங்கிடாதே.

(10) கண்ட பெண்டாட்டி தம்பியுங் கூடில்
காணிபூமி யிவனுக்குப் பேசிடாய்
அண்டிலக்கினத்தாதிபன் கேந்திரம்
ஆனஜாதகங்களானாலும் யோமேக.

(11) அரியும் நான்காமதிபதி பாவியாய்
ஆருமெட்டுப்பனி ரெண்டிலேரிட
சூரியும்பாவர்கள் மனையிலிருக்கினும்
குடும்பமாரிடு பிதுர்வர்க்க நாசமாம்.

(12) அரியு நான் காமதிபதி சுபனுமாய்
ஆறெட்டு பனிரெண்டிலேரிட
குறியுவாளைப் பருவங்காயிடில்
குடும்பம் ஓங்கிடுந்தென்திசைபேசிடு.

(13) அரியுரெண்டாமாதி பதிபாவியாய்,
ஆறெட்டு பனிரெண்டிலேரிட
குரியுஞ்சப்த்தமத்ததிபதி கூடிடில்
குடும்பமிரண்டு களத்திரம் செய்துவார்.

(14) பிரியமாகிய சுங்கன்வலுத்திட
பின்னுமிரண்டாதி கேந்திரமேரிடில்
குரியதோஷங்கள் செய்திடுங்களத்திரம்
குருடுசெவிடு மேவிண்ணங்கள் பேசலாம்.

(15) சப்த்தமாதி பலங்கொண்டேரிட
சனியுஞ் செவ்வாயுங் கூடினும் நோக்கினும்
சித்தமாகிய சுங்கனும் பிலமற
ஜோடிரெண்டு களத்திரம் செய்துவார்.

திரவுகோல் முற்றிற்று.